Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 13-3-1948 சனிக்கிழமை { மலர் 27.

## கருப்புடை அணிதலும், பரப்புதலுமே கழகத் தொண்டர்கள் வேலை.

### சாந்தம் சமாதானத்தைச்சலிப்படையாமல்கைக்கொள்வீர்!

★

தலைவர் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி சர்க்கார் தடையுத்தரவால் கழக அங்கத்தினர்கள், பொது மக்கள் தங்களுடைய வேலைகளையும் மற்றும், அங்கத்தினர் சேர்த்தல், கழகங்கள் ஸ்தாபித்தல், சமுதாய இழிவை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு ஆக அறிகுறியாகக் கருப்புடை அணிதல், அதைப் பரப்புதல், சமுதாய இழிவு நீக்கப் பிரசாரம் செய்தல், ஆகிய காரியங்களில் சிறிதும் மாறுதல் இல்லாமல் முன்னிலும் அதிகமான ஊக்கத்தோடு, முன்னிலும் அதிகமான சாந்தமும் சமாதானமுமான தன்மையில், தொண்டாற்றிக் கழக லட்சியத்திற்கு வெற்றி கிடைக்கச் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறது.

[7-3-48ம் நாள் கூடிய மத்திய திராவிடக்கழகத்தின் முடிவு]

# பெரியார் பதில் சொல்லுவார்!

## நீங்கள் பொறுமையாயிருங்கள்!

(கைவல்யம்)

★

திராவிட வாலிபர்களே! கோபதாபங்களை ஒதுக்கி வையுங்கள். ஆலோசனையும், பொறுமையும் வேண்டிய சமயமிது. நமதுபெரியாரைஅருளுடையவரென்றோ, ஆத்ம ஞானிஎன்றோ நாம்சொல்லுவதில்லை. ஆனால் அவருடைய புத்திக் கூர்மையும் விசால நோக்கமும் சனங்களுக்கெல்லாம் தெரிந்துவிடும். அதுவரையிலும் அவர் சொற்படியே நடப்போம்! அப்படியே நடக்க வேண்டும்! ஆபத்து வரும்போது புலனிழந்து போகாமல் காக்கவேண்டும். பிராமணர்கள் நகைக்கிறார்கள்; இறுமாப்புக் கொள்ளுகிறார்கள் என்பதால், கோபமோ, வருத்தமோ அடையாதீர்கள்! நமது பெரிய பண்டிதர்கள், பணக்காரர்கள், பிரபுக்கள், படித்தவர்கள் முதற்கொண்டு எல்லோரும் பிராமணன் காலில் தெய்வத்தைக் கண்டு வணங்கித் திருப்தி அடைவதைவிடவா இதில் குறை ஏற்பட்டு விட்டது. சட்டமும் அவர்களுடையது. அதன் ஏற்பாடும் அவர்களுடையது. அவர்கள் எதையும் சொல்லுவார்கள். சொன்னதைப் பொறுத்துவதற்குக் கூச்சமில்லாமல் பேசுவார்கள். மதுரை வைத்தியநாத அய்யரின் சட்டசபைப் பேச்சைப் பாருங்கள்! மந்திரி சபையின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையில், கம்யூனிஸ்ட்களும் கருஞ்சட்டைப் படையினரும், இன்னபிறரும் ஒன்றுகூடும் மகாநாடுகளில் மந்திரிகள் கலந்து கொள்ளாது தூர விலகி நிற்பது நல்லதாகும்! என்று மந்திரிகளுக்கு ஆலோசனை சொல்லுகிறார். இதைவிடப் பேச்சில் புரட்டு வேறு உண்டா? எந்தக் கருஞ்சட்டை மகாநாட்டுக்கு எப்பொழுது எந்தெந்த மந்திரிகள் போனார்கள்? இதற்கு ஆதாரமுண்டா? உண்மையா? நமது கையைக் கொண்டே நமது கண்களைக் குத்த ஏற்படுத்தின மந்திரிகள் என்பதை நாம் அறியாமலில்லை. சிறிது நாளைக்கு முன் காமராஜ் நாடாரை நம்புங்கள் என்று இராஜகோபாலாச்சாரி சொன்னாரே! அதன் கருத்தென்ன? காமராஜ நாடார் அதிகாரப் பதவியை வகிப்பதில் பல பிராமணர்களுக்கு இஷ்டமில்லை. பிராமணர்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாக நாடார் போகமாட்டார் என்கிற நம்பிக்கையை உண்டாக்க ஆச்சாரியார் அவ்விதம் சொன்னார்.

இராஜகோபாலாச்சாரியாரின் படத்தை முதல் மந்திரி திறந்து வைத்தார். இராமருக்கு அனுமார் எப்படியோ, அப்படி மகாத்மா காந்திக்கு இராஜகோபாலாச்சாரி என்றார். அனுமான் வாலியின் மந்திரி. சுக்ரீவனுக்கும் அனுமானுக்கும் சம்பந்தமில்லை. வாலிக்குத் துரோகம் செய்து சுக்கிரீவனோடு சேர்ந்து, இராமனால் வாலியைக் கொல்லச் செய்தான் என்கிற அனுமானின் சரித்திரம் முதல் மந்திரிக்குத் தெரிந்துதானிருக்கவேண்டும். அந்த அனுமான் தான் நமது சுயராஜ்ஜிய உபமானத்தில் பல இடத்தில் காணப்படுகிறார். அந்த இராமாயணத்திலிருந்து தான் புது சுயராஜ்ஜியத்தைக் கடைந்தெடுக்கப் போகிறதாகக் கல்வி மந்திரியும் சொல்லுகிறார். இராமாயணத்திலிருந்து கடைந்தெடுத்த நம் சுயராஜ்ஜிய கவர்மெண்டில் நமக்குப் போட்ட உத்தரவு பெரிதல்லவே. ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும் யார் தீங்கு செய்கிறார்களோ அவர்களைக் கொல்லவே வில்லேந்தி வந்திருக்கிறேன் என்று இராமரே சொல்லுகிறார். ஒருவனுக்குக் காலில் புண். அதற்கு வைத்தியம் ஒருவனிடம் கேட்டான். அவன் பொடுதலையை வைத்துக் கட்டச் சொன்னான். பொடுதலையை உடைய ஒருவனைக் கூட்டி வந்து, காலை அவன் தலையில் வைத்துக் கட்டி, சிறிது நேரம் பொறுத்து அவிழ்த்துப் பொடுதலைக்காரனைப் போகச்சொன்னான். என்னைக் கூப்பிட்டு என் தலையில் உன் காலை வைத்துக் கட்டி அவிழ்த்து விட்டுப் போகச்சொல்லுகிறாயே இது என்? என்று கேட்டான். என் கால் புண்ணிற்கு ஒரு வைத்தியன் பொடுதலையைவைத்துக் கட்டச் சொன்னான் என்றான். அந்த வைத்தியன் இருப்பு எங்கே? என்று கேட்டான். பக்கத்து வீதி கீழ்ப்பாகமென்றான். பொடுதலைக்காரன் மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டித் தெண்டமிட்டுக் கும்பிட்டான். என் கும்பிட்டாய்? என்று புண்காரன் கேட்டான். பொடுதலையைவைத்துக் கட்டச்சொன்னானேயல்லாமல், தட்டிக் கொட்டி வைத்துக் கட்டச் சொல்லவில்லையே, அப்படிச் சொல்லியிருந்தால் என் தலை என்னவாகும்? பொடுதளை யென்பது ஒரு செடி மூலிகை. மனிதன் தலையல்லவென்று போய்விட்டான். அதுபோல கவர்மெண்டுக்கு ஆலோசனை சொன்னவர்கள் ஆலோசனை சக்தியுடையவர்களாயிருந்தும் கருஞ்சட்டைக்காரர்களின் கருஞ்சட்டைகளையும், அவர்கள் பழய பத்திரிகைகளையும் எடுத்துக் கொண்டு சட்டத்திற்குப் புறம்பானதென்று தள்ளிவிடவேண்டுமென்று சொன்னார்களேயல்லாமல், கருஞ்சட்டைக் காரர்களை எல்லாம் பிடித்துத் தூக்குப்போடு! அண்டமானுக்கனுப்பு! பெண்டாட்டி பிள்ளைகளை யெல்லாம் பட்டினிபோட்டுக் கொல்! என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் கருஞ்சட்டைக்காரர் கதி என்னவாகும்? அதெல்லாம் இந்தக் காலத்தில் ஆகுமா? கருஞ்சட்டையும் பழைய பத்திரிகையும் தவிர ஈட்டியும் துப்பாக்கியும் வெடிகுண்டுகளுமா அவர்களிடமிருக்கிறது? எங்காவது ஜெயிலைப்பெயர்த்தார்களா? போலீஸ்டேசனை இடித்தார்களா? ஒன்றுமில்லையே? கண் போய். கால்ஒடிந்து கொட்டகையைக் கொழுத்தக் கொடுத்தல்லவா கிடக்கிறார்கள்! மலை ஜாதியார்களைப் போலச் சண்டைக்கா வந்திருக்கிறார்கள்? மகாத்மாவைச் சுட்டார்களா? சதியில் சேர்ந்தார்களா? சர்க்கரை விளம்பினார்களா? பால் பாயசம் வைத்தார்களா? பட்டேல்ஜவாஹர்லால்நேருவைக்கொல்லஏற்பாடாசெய்கிறார்கள்? அப்படி ஒன்றுமேயில்லையே? தொல்லையும் கலகமுமாகவிருக்கும் காலங்களிலும், நாகரீகமானது செலுத்த வேண்டிய கடமைகள் இருக்கிறது. அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது. அதை நாகரீக ஜனக்கூட்டத்தில் கையாளு முன்னே சட்டம், நியாயமென்ற சல்லடையால் வடிகட்டி, எல்லாவிதமான கோபம், பகைமை, பட்சபாதம் இல்லாதபடி செய்தல் மரபு. இல்லாவிட்டால் நியாயாதிபதியின் கோலுக்கும், திருடன் தடிக்கும் சரியானபடி வேற்றுமையைத் தெரியாமல் போய் விடாதா? இதெல்லாம் உன்னையார் கேட்டா? பார்ப்பானைக் குற்றம் சொன்னையா? இல்லையா? பார்ப்பார்கள் எங்களையும், எங்களவர்களையும் பார்ப்பாரத் தாசிமக்களென்றும் சூத்திர மடையர்களென்றும் சொல்லுகிறார்களே! அதைவிடக் கேவலமாகவா அவர்களைத் திட்டிவிட்டோம். உங்களைப் பார்ப்பார்களின் வைப்பாட்டி மக்களென்றும், சூத்திர மடையர்களென்றும் பார்ப்பனர்களா சொல்லுகிறார்கள்? அவர்கள் சாஸ்திரம், வேதம், கடவுள் சொல்லுகிறது! அதற்காக அவர்கள்என்னசெய்வார்கள்? அதற்காகஅவர்களைத் திட்டலாமோ? உங்கள் பிரபுக்கள், பண்டிதர்கள், ஜெமின், மிட்டா, மிராஸ், பெரிய பண்ணை, சின்னப் பண்ணை, பாளையப்பட்டு எல்லோரும் ஒத்துக் கேட்டுக் கொண்டு படிப்பு, பக்தி ஒழுக்க மூன்றுமில்லாத கோயிற் குருக்கள், சுடுகாட்டுப் புரோகிதன்

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

ரோஜா முத்தையா




காட்சி 25

கோசலை வீடு:- (கோசலைஇராமன் பட்டாபிஷேகத்திற்கு எவ்விதத் தடையும் ஏற்பட்டு விடக்கூடாதென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாள். இலட்சுமணன் பக்கத்தில் நின்று கொண்டிருக்கின்றான். இராமன் கோசலை வீட்டுக்கு வருகின்றான். வருகிற வழியில் இராமன் "ஆ கடவுளே! என் தலைவிதி இப்படியா நேர்ந்தது" என்று நினைத்துத் துக்கம் பொறுக்கமாட்டாமல் தலையிலடித்துக் கொண்டு வேதனைப் படுகின்றான். வீட்டுக்குள் நுழையும் போது, தானே திடுக்கிட்டு "நாமே இப்படித் துக்கப்பட்டால், இனி தாயாரும் நண்பர்களும் எவ்வளவு துக்கப்படுவார்கள். நமது துக்கத்தை வெளியிடக் கூடாது" என்று துக்கத்தை அடக்கிக் கொண்டு உள்ளே புகுந்து தாயை வணங்குகிறான்.

இராமன்:- தாயே! வணக்கம். [துக்கத்தோடு நின்று கைகூப்பிச் சொல்லுதல்]


கோசலை:- இராமா! மங்களம் உண்டாகட்டும்! உன்முகம் என்ன இப்போது ஏதோ ஒரு பெரும் துக்கத்தில் ஆழ்ந்த மனதுடைய முகம்போல் காணப்படுகிறதே. பட்டாபிஷேகத்துக்கு ஏதாவது ஆபத்து வந்து விட்டதா? ஒரு நாளும் வாக்குத் தவற மாட்டார் உன் தந்தை. எப்படியும் எடுத்த காரியத்தை முடித்துவிடுவார். இன்றையத் தினமே நீ அரசனாகப் போகிறாய். கவலை ஏன்? இந்த ஆசனத்தில் அமரு! சாப்பிடலாம் வா!

இராமன்:- அம்மா! ஆசனம் ஒரு கேடா! எனக்கும், உனக்கும், சீதைக்கும், இலட்சுமணனுக்கும் துக்கத்தையும், பெரும் கேட்டையும் கொடுக்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

கோசலை:- (திடுக்கிட்டு) ஹா! அய்யோ! மகனே! அப்படிப்பட்ட கெட்ட சங்கதி என்ன? துக்கப் படாமல் சொல்லு!

இராமன்:- அம்மா! எனக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகமில்லை. பரதனுக்கு ஆகப்போகிறது. என் கைக்கு எட்டிய இராஜ்ஜியமும் போய், நான் 14 ஆண்டு காட்டுக்குப்போக வேண்டும். இது தந்தை கட்டளை. மாமிசத்தை விலக்கி இனி நான் காய், கிழங்கு தான் சாப்பிடவேண்டும்! போய் வருகிறேன்!

கோசலை:- (வயிற்றிலடித்துக் கொண்டு) அய்யோ! தெய்வமே! என் எண்ணமெல்லாம் இப்படியா ஆகவேண்டும். என்னிடம் காசு பணமும் இல்லையே. நகையும் இல்லையே. என் அழகும் போய் விட்டதே. அரசர் கண்ணுக்கும் பிடித்தமில்லாத கிழவியாக இருக்கிறேனே. இந்த நிலையில் நீயும் போய்விட்டால் என்னை இனி யார் சட்டை செய்வார்கள்? இந்த




நிலையில் நான் உன்னை விட்டு உயிர்வாழ மாட்டேன். நீ என்னை விட்டுப் போகக்கூடாது. நீ போக அனுமதிக்கமாட்டேன் நான்.

இலட்சுமணன்:- அம்மா! அப்படிச் சொல்லுங்கள்! இராமர் காட்டிற்குப் போவது எனக்குச் சம்மதமில்லை. ஒரு பெண் பிள்ளை சொன்னால், அதைக் கேட்டுக் கொண்டு காட்டுக்குப் போவதா? முடியாது! இராமா! இதோ நிமிட நேரத்தில் அயோத்திராஜ்ஜியத்தை உன் கைவசப்படுத்தி விடுகிறேன். குடிகள் ஒப்புக்கொள்ளாவிட்டால் மனிதப் பூண்டே இந்த நாட்டில் இல்லாமல் செய்து விடுகிறேன். பரதனுடைய கட்சியார் எல்லோரையும், அவன் தாயாரையும், பரதனையும், யாவரையும் அழித்து விடுகிறேன்.

நமது தந்தையாரையும்கொன்று விடுகிறேன். அல்லது சிறையில் வைத்துவிடுகிறேன், அவர் யோக்கியரல்ல. அவர் உம்மை ஏமாற்ற இச்சதி செய்திருக்கிறார். அவர் கைகேசியிடம் பேசி முன்னேற்பாடாக அதாவது, நான் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாய் நடிப்பு ஏற்பாடு செய்கிறேன். நீ அதைத் தடுத்து விடு என்று சொல்லி இப்படிச் செய்திருக்கின்றார். அவரையும் கொன்று விடுகிறேன். அம்மா என்ன சொல்கிறீர்?

கோசலை:- இராமா! உன் தம்பி சொல்வதைக் கேள். என் சக்களத்தி பேச்சைக் கேட்டுக்கொண்டு நீ காட்டுக்குப் போகாதே!

இராமன்:- அம்மா! அவனுக்கு இராஜ்ஜியம் போய்விட்டதென்ற ஆத்திரம் இருக்கிறது. அவனுக்கு இராஜ்ஜியத்தை அடைய நல்லவழி எது என்பது தெரியவில்லை. நான் இப்போது காட்டிற்குப் போவது தான் இராஜ்ஜியத்தை யடைய நல்லவழி! நீ கவலைப்படாமல் அரசரைக் கவனித்துக் கொண்டு இரு! நான் திரும்பி வந்து இராஜ்ஜியத்தை அடைந்து உன் ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன்! இப்போது நாம் இந்த நிலைமையில் இராஜ்ஜியத்திற்கு ஆசைப்பட்டால் குடிஜனங்கள் எதிர்ப்பு ஏற்பட்டு விடும். ஏனென்றால் குடிஜனங்களுக்கு உண்மை தெரிந்து விட்டது. தந்திரமாய்க் காரியம் செய்யவேண்டும்! கவலைப் படாதே! இதை நம்பு!

கோசலை:- சரி! அப்படியனால் போய்விட்டு வா! மனதைரியத்தோடும், உறுதியோடும் போய் விட்டு வா! அவசியம் வந்தாகவேண்டும். நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். நீ திரும்பி வந்து உன்னை அரசனாகக் கண்ட பிறகுதான் என்மனம் நிம்மதி

# அறிவிற்குத் தடையா?

(சு. திராவிடமணி)

★

அண்மையில் சென்னை சர்க்கார் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி நிலையங்களில் மதத்தை இழிவு படுத்தும் முறையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ளக்கூடாதென்றும், அப்படிச் செய்தால் அவ்வாசிரியன் மானியமும், அப்பள்ளியின் மானியமும் நிறுத்தப்படும் என்றும் எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் ஆணையிட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் அவினாசியாரின் இந்தக் கட்டளையைக் கண்ட நாம் ஒருபுறம் ஆச்சரியமும், மற்றொரு புறம் இரக்கமும் கொள்கிறோம். கல்விக் கழகங்களில் மதத்தின் கொள்கைகள் பற்றிய விளக்கத்தில், பகுத்தறிவுக்கேற்ற முறையில் அபிப்பிராயங்கள் தெரிவிப்பது சட்ட விரோதமாகக் கருதப் படுகிறது—அதுவும் மங்களகரமான மஞ்சள்பெட்டியில் வாக்குப் பெற்று அரியணையேறின சர்க்காரால்—ஜனநாயகம் நின்று நிலவும் சர்க்கார் என்று சொல்லப்படும் சர்க்காரால்—என்றால் நமக்கெல்லாம் ஆச்சரியம் ஏற்படாமலிருக்க முடியாது. அமைச்சர் அவினாசிலிங்கம் இந்த ஆணையிட்டதின் மூலம் ஆரியத்திற்கு அஞ்சுகிறாரே என்ற இரக்கமும் ஏற்படாமலிருக்க முடியாது. இந்தப் புதிய கட்டளை ஆரியத்தின் பல வெற்றிகளில் ஒன்று என்பதும் நாம் அறிந்ததேயாகும்.

வீழ்ச்சிப் படுகுழியை நோக்கி விரைவாக உருண்டு கொண்டிருக்கும் ஆரியம்—அணையப் போகும் விளக்கு பிரகாசமாக எரிவதைப்போல—தன்னாலான மட்டும் திராவிடர்களை ஏமாற்றி வருகிறது. ஆரியத்தின் இந்நவீன சூழ்ச்சி வெற்றி பெற்றபோதிலும் இனிவரும் திராவிடத்தில் ஆரியம், அதன் சூழ்ச்சியுட்பட நிச்சயம் புதைக்கப் படும் என்பது உறுதி.

ஆரியத்தின் சூழ்ச்சிக்குத் தமிழன் தலைவனாக இருக்கும் இன்றையச் சர்க்கார் இடங்கொடுத்தது மிகவும் வெட்கப் படக்கூடியது. நாட்டை எந்த முறையில் அரசாண்டால் மக்களுக்குச் சுகவாழ்வு கிடைக்கும், நாட்டுக்கு மதிப்பு ஏற்படும் என்பதை ஆராய்ந்து பார்த்துச் செயலாற்றுவதை விட்டு விட்டு மடிந்து கொண்டிருக்கும் முறையற்ற, நீதியற்ற, ஒழுங்கற்ற இந்து (பார்ப்பனீய) மதத்திற்கு உயிர்ப்பிச்சை கொடுக்க முன்வந்திருப்பது கண்டு தான் ஆச்சரியப் படுகிறோம். இன்று நாட்டிலே என்றுமில்லாத உணவுப் பஞ்சம் தாண்டவ மாடுகிறது. உடைப் பஞ்சமும் அவ்வாறே இருக்கிறது. தொழிலாளர்களின் குறைகள் தீர்க்கப் படவில்லை. ஆசிரியர்களின் அல்லல்கள் அகற்றப் படவில்லை. ஏழை மேலும் மேலும் வறுமைப் படுகுழியை நோக்கியே சென்று கொண்டும், முதலாளி செல்வக் குன்றுக்கு ஏறிச் சென்று கொண்டுமிருக்கிறான். நாட்டில் கள்ள வியாபாரங்கள் ஏராளமாக—தடுக்க முடியாத அளவில்—பெருகி விட்டன. தேசியத்தின் பெயரால் நாட்டில் பணக்கார ஆதிக்கம் வேரூன்ற ஆரம்பித்து விட்டது.

நாடு இப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்தில் சிக்கிக்கொண்டு தத்தளிக்கின்றபோது, நாட்டை மீட்டுவதற்கான திட்டங்களை வகுத்து, முறையோடு செயலாற்ற முற்படாமல், முறையற்ற மதத்திற்கு—நாட்டைச்சீர்கேடான நிலைமைக்குக் கொண்டுவந்த மதத்திற்கு—புத்துயிர் கொடுக்க இந்தத் தேசிய சர்க்கார் முற்படுகிறதென்றால் நமக்கெல்லாம் (முற்போக்காளர்கள் அனைவருக்குமே) ஆச்சரியமும், இரக்கமும் ஏற்படாமலிருக்க முடியுமா? மதத்தைக் குறைகூறுவது முறையற்ற தன்மை என்று சர்க்கார் கருதுகிறதென்றால், அக் குறையை, ஆசிரியர்கள் கூற வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது என்பதைச் சர்க்கார் உணரவேண்டாமா? மதம் முறையற்ற தன்மையில் இருப்பதினாலல்லவா அதைப் பற்றிக் குறை கூறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மதம் முறையோடு இருந்தால் அதைப் பற்றி எவர்தான் குறைகூற முடியும் என்பதைச் சர்க்கார் ஆராய்ந்தறிய வேண்டாமா? ஆராய்வதை விட்டு ஆரியம் அலறுகிறது என்பதற்காக, மாண்டு கொண்டிருக்கும் மதத்திற்குப் புத்துயிர் அளிக்க முனைவது ஒழுங்கான சர்க்காரின் கடமையாகுமா? என்பதைத் தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

மதத்தைப்பற்றி மாறுபட்ட கருத்தைக் கூறும் ஆசிரியர்களுக்கும், அவர்களைக் கண்காணித்துவரும் பொறுப்பாளிகளுக்கும் கொடுத்துவரும் சர்க்கார் மானியம் (கிராண்ட்) நிறுத்தப்படும் என்றும் சர்க்கார் சட்டமியற்றியுள்ளனர். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களுக்குச்சீர்திருத்த நோக்கத்துடன் போதிக்கக் கூடாது என்பது சர்க்காவின் விருப்பம் போலும்! மாணவர்கள் அணுக்குண்டு காலத்திலும்கூட பழமைப் பாசறையிலே இருக்க வேண்டும், அவர்களின் அறிவைப் பாழ்படுத்த வேண்டும் என்பதும் காருண்ய மிகுந்த சர்க்காரின் கருணை போலும்! நாட்டின் வருங்காலச் சிற்பிகளான மாணவர்களை முன்னேறவொட்டாமல் தடுக்க வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம் போலும்! அறிவியல் (விஞ்ஞான) துறையில் உலகம் வாயு வேகத்தில் முன்னேறிக் கொண்டு வரும் இக்காலத்திலும்கூட, இந்த நாட்டிலுள்ள பள்ளிகள் அனைத்தையும் பஜனைக் கூடங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்பதுவும் சர்க்காரின் புனரமைப்புத் திட்டம் போலும்! இந்த நிலையிலேயே சர்க்கார் நடந்து கொண்டே சென்றால் நமது தமிழ் நாடு—ஓர் காலத்திலே மேலை நாடுகளுடன் பெரும் தொடர்பு கொண்டிருந்த நம் தமிழ்நாடு—இருக்குமிடம் தெரியாமல் போய்விடும் என்பது உறுதி. பகுத்தறிவே வருங்காலத்தில் தோன்றாது. பழைய வருணாச்சிரம தருமமே நிலைக்கும் என்பதுவும் உறுதி.

மாறுபட்ட கருத்துக்களைக் கூறினால் ஆசிரியர்களின் மானியம் பறிக்கப்படும் என்ற செய்தி மிகவும் வருந்தத்தக்கது. அதுவும் பொதுமக்களால் அமைக்கப் பெற்ற இந்த அரசாங்கம், இத்தகைய கைங்கரியத்தைச் செய்ய முற்பட்டிருக்கிறதென்பது மிகவும் வேதனையையும், வெறுப்பையும் தரக்கூடியதாகும். சர்க்காரின் இந்த நடவடிக்கை அதன் பெயரையே கெடுத்துவிடும் என அஞ்சுகிறோம். பொதுமக்களின் அரசாங்கத்தில் மக்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு, அவர்களின் குறைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உரிமை உண்டு. மூடப் பழக்க வழக்கங்கள் நிறைந்த மதக் கொள்கைகளும், கதைகளும் மாணவர்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

---

யடையும்! வாக்குத் தவறி விடாதே! திரும்பி வந்து இந்த அயோத்திக்கு அரசனாக அமர்ந்து எனக்குக் காட்சிதரப்போகும் இராமா! சுகமாகப் போய்விட்டுச் சீக்கிரம் வந்துசேர்!

[இராமனுக்கு முத்தம் கொடுத்துக் குஷாலாய் உத்தரவு கொடுக்க இராமன் அவ்விடத்தை விட்டுச் செல்கிறான். காட்சி முடிகிறது]

---

## இழிநிலை போக்கிட ஏற்றது கருப்புடை!

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# போலீசார் சோதனை!

## கொடிகளை இறக்கிய கொடுமை!

★

3—3—48

**இராசிபுரத்தில்:** பெரியார் மாளிகையில் வந்து கமிட்டி உறுப்பினர்கள் யார்? யார்? என்ற போலீசார் விசாரணை.

**சேலத்தில்:** குகை திராவிடர் கழகம் சோதனை. வெறுங்கையுடன் வெளியேற்றம்.

**பொள்ளாச்சியில்:** திராவிடர் கழகமும் மோட்டார் தொழிலாளர் சங்கமும் சோதனை. வெறுங்கையுடன் திரும்பினர்.

**நாமக்கல்லில்:** திராவிடர் கழகமும், ஆனைமுத்து வீடும், நல்லிபாளையம் திராவிடர் கழகமும் சோதனை. நல்லிபாளையம் கழக நடவடிக்கைப் புத்தகம் கைப்பற்றல்.

**பெரிய குளத்தில்:** ராமையாவீட்டில் கருஞ்சட்டையும், திருவேங்கடம்கடை, வீடுகளில் கழக ரசீது புத்தகமும், திராவிடர் மாணவர் கழகத்தில் ரசீது புத்தகம், பேட்ஜ், போர்டு, கொடிகள் முதலியவைகளையும் சோதனையிட்டுக்கைப்பற்றினர். இரவு 11 மணிக்கு 2 ரிசர்வ் லாரியுடன் பஸ் ஸ்டாண்டில் பறந்த கொடியை இறக்கு விழா நடத்தினர்.

**மணலூர்ப்பேட்டையில்:** கொடி இறக்குவிழாவுடன் சட்டை போடாதே! கூட்டம் நடத்தாதே! என்ற எச்சரிக்கைகள்.

**காஞ்சியில்:** எல்லாக் கழகங்களும் சோதனை. கைப்பற்றியது கழக ரிக்கார்டுகள். கேட்டு வாங்கினார்களாம் கொடியை.

**திருவண்ணாமலையில்:** கழகமும், ப. உ. சண்முகம் வீடும் சோதனை: டையரி, படங்கள், தாள்கள், புத்தகங்கள், ரசீது, நோட்புத்தகங்களை மூட்டைகட்டினர்.

**சிறுத்தொண்டநல்லூரில்:** சிவசங்கு, பாலரசு வீடுகள் சோதனை. புத்தகங்களையெல்லாம் மூட்டை கட்டினர்.

**அம்மாப்பேட்டையில்:** திராவிடர் கழகம் சோதனை. ஒன்றுமில்லை என்று எழுதினர். சிலர் பெயரைக் குறித்துக்கொண்டனர்.

**சேடர்பாளையத்தில்:** கழகம் சோதனை. பெயர் எழுதிச் சென்றனர். மறுநாள் வந்து விசாரித்தனர். ஒன்றும் தூக்கவில்லை.

**நாமகிரிப்பேட்டையில்:** கழகம் சோதனை. விசாரணை. ஒன்றும் தூக்கவில்லை.

**கள்ளி குளத்தில்:** திராவிடர் கழகமும், தலைவர் வீடும் சோதனை. ரசீது புத்தகங்களைக் கொண்டு போயினர்.

**திருப்பத்தூரில்:** கழகத்தில் தஸ்தாவேஜுகள் கைப்பற்றல். வாலிபர் கழகத்தில் பெரியார் படம் கைப்பற்றல்.

**கடம்பூரில்:** திராவிடர் கழகமும், செல்லையாவீடும் சோதனை. இல்லை ஒன்றும் என்பதை எழுத்தில் எழுதினர்.

**திருக்கோவிலூரில்:** கழகத் தலைவர் வீடு சோதனை. அங்கத்தினர் புத்தகம் கைப்பற்றல். கொடியை இறக்கச் சொன்னார்களாம்.

**திருச்சியில்:** சுலைமான் வீட்டில் சட்டை கடிதம் கைப்பற்றல்.

**திருப்பாப்புலியூரில்:** மா. பீட்டர்வீடு சோதனை.

**தளவாய்புரத்தில்:** கழகம் சோதனை. வெள்ளைக் காலணியுள்பட எல்லாவற்றையும் மூட்டை கட்டினர்.

**பிள்ளையார் பாளையத்தில்:** கழகம் சோதனை. ரசீது, லெட்டர் பேட், கூட்ட முன்னறிவிப்புகளைக் கண்டுபிடித்தார்கள்.

**போடிநாயக்கனூரில்:** கழகம் சோதனை. போர்டு, கொடிகள், மினிட், சந்தா, கணக்குப் புத்தகங்களைச் சுமந்து போனார்கள்.

4—3—48

**விழுப்புரத்தில்:** டாக்டர் தியாகராசன் வீடு சோதனை. கைப்பற்றியது ரசீது, கடிதம், மாநாடு சம்பந்தமான குறிப்புகள். இரு நடராசன் வீடுகளும் சோதனை. வெறுங்கையுடன் வெளியேற்றம்.

**வாணியம்பாடியில்:** திராவிடர் கழகமும், சி. கோவிந்த ராஜன் வீடும் சோதனை. வெறுங்கையுடன் வெளியேற்றம்.

**கோபியில்:** ஜி. எ. வெங்கிடாசலம் கடை சோதனை. கைப்பற்றியது டையரி.

**தருமபுரியில்:** பி. பொன்னுசாமி வீடும் அச்சகமும் சோதனை. மினிட் புத்தகம் விளம்பரத் துண்டுகள் கைப் பற்றல்.

**சிதம்பரத்தில்:** எம். கே. சுந்தரம் வீடும், சாலியந்தோப்பு கிருஷ்ணசாமி வீடும் சோதனை. அலுத்தது தான் மிச்சம்.

**மாங்காட்டில்:** பூந்தமல்லிக்கடுத்த மாங்காட்டில் கழகத்தலைவர் எம். ஆர். கண்ணப்பன் வீடு சோதனை. கைப்பற்றியது கழக ரிக்கார்டு. கொடி இறக்கு விழாவையும் போலீசார் செய்தனர்.

பெரிய மாங்காட்டில் வடமலை, மதன சேகரன், ஏசுதாஸ் வீடுகள் சோதனை. கைப்பற்றியது கழக அங்கத்தினர் ரசீதுகள். பலவந்தமாகக் கொடி இறக்கும் விழாவையும் செய்தனர்.

**கோவையில்:** நகரத் திராவிடர் கழகம் சோதனை. கிடைத்தது ஏமாற்றம்.

**அநூரில்:** வேணுகோபால், குள்ளப்பன், அஸ்வத் நாராயணன், பரசுராமன், கோவிந்தன், பசுலுதீன் வீடுகள் சோதனை. கைப்பற்றியது ரசீதுப் புத்தகங்கள், கொடி, சட்டை, மினிட் நோட் ஆகியவை.

**கணியூரில்:** பகுத்தறிவுப் படிப்பகம் சோதனை. கணக்கேடும், சட்டையும் கைப்பற்றல். நகரத் திராவிடர் கழகமும் சோதனை: இல்லை ஒன்றும் என எழுதிப் போயினர்.

**இராமநாத புரத்தில்:** எஸ். வி. அச்சகமும், மோகன் கடையும், வேலுசாமி வீடும் சோதனை. வெறுங்கையுடன் திரும்பல்.

**பட்டிவீரன் பட்டியில்:** மு. ஆள்வார் வீட்டில் சட்டைகள் பத்திரிக்கைகள் கைப் பற்றல். பொது இடங்களில் பறந்த 2 கொடிகளை கொடிக்கம்பங்களோடு பிடுங்கினார்கள்.

**சிங்கம் புணரியில்:** எல்லா அங்கத்தினர்களையும் பெயர் குறித்துக் கொண்டு போனார்களாம்.

**வாடிப்பட்டியில்:** சுப்பையா, பாண்டியன் வீடுகள் சோதனை. ஏமிலேது.

**மானாம் பதியில்:** தேவர் சேனாதிபதி, தேவர் சிங்கம், காமகோடி முதலியோர் வீடுகள் சோதனை. புத்தகம், துணி, ரசீது, கொடி, முதலியன கைப்பற்றல். கொடி இறக்கும் திருப்பணியும் செய்தனர்.

**திருப்பத்தூரில்:** மு. தருமலிங்கம், சி. எம். சுப்பிரமணியம், வழக்கறிஞர் ஜி. சாமி, பி. எம். மேகநாதன் வீடுகள் சோதனை.

**இராசபாளையத்தில்:** ஆதிநாராயணன் வீடும் ஆபீசும், நாடார் வாலிபர் சங்கமும் சோதனை. கார்டும் புத்தகமும் கைப் பற்றல்.

**அலங்கா நல்லூரில்:** அழகிரிசாமி வீடு சோதனை. ஏமிலேது.

**வில்லிவாக்கத்தில்:** கழகமும் பாபு வீடும் முனுசாமி வீடும் சோதனை.

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## கருப்புடையணியும் காளைகள் பெருகுக!

ரோஜா முத்தையா

# அந்த நாளும் வந்திடாதோ?

[சி. சங்கரலிங்கம்]

★

திராவிடா! உன் இனத்தைப் பார். ஒருக்கால் சீரும் சிறப்புடன், மதிப்பும், மாண்புமுற அரியணை மீதிருந்து அரசாண்ட உன் பண்டைக் கீர்த்தி, புகழ், பண்பு, நாகரிகம் எல்லாம் எங்கு போய் மறைந்து மாண்டன? சிந்தித்தாயா நீ? காணுவது என்ன? பண்டைத் திராவிடர் வாழ்வு மறவாழ்வு; பண்பு—ஒப்பற்றது; கலை மேன்மையுள்ளது—என்பவைகளை நீ மறந்தனை. மண்ணில் புதைந்து கிடந்த ஹாரப்பா—மொஹன்—ஜ—தாரோவின்பண்பு நாகரிகம், கலை—இவைகளின் மேன்மையை நோக்கு. ஏகச் சக்கரவர்த்தியாய்த் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய், இவ்விந்தியாவைத் தன் ஒரு குடைக் கீழ் ஆண்ட அசோகனுக்கும் அடி பணியாது, தனித்துச் சுதந்தர நாடாய் நம்நாடு அரசோச்சியது என்பதனை நீ மறந்தனை. வடநாடு அனைத்தையும் தன் தோள் வலியால் வாள்ஏந்தி வெஞ்சமர் புரிந்துவென்று, இமயத்தின் நெற்றியில் தனது வெற்றியைக் குறிக்கப் பொறித்த இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனை நீ மறந்தாய். மரக்கலங்களின் பேருதவியால் கடல் கடந்து வாணிப அரசர்களாய்க் கீர்த்தியுடன் வாழ்ந்த மறத் தமிழர்களை நீ மறந்தாய். கத்திகளும், கேடயங்களும், வாள்களும், வேல்களும் ஒலித்த நாட்டின் ஒளி தேய்வதை நீ மறந்தாய்.

மறந்து.........!! இடைக்காலத்தில் மக்களின் மதியை மாய்க்கச் சதிசெய்து, நம்மைக் கீழ்க்கதிக்குத் கொண்டு வந்த ஆரியம், புரட்டுப் புராணங்களுக்குத் தலை வணங்கி, சூரனை வென்ற சுப்பிரமணியன் வேலைகளையும், பக்தர்களுக்கு எனப் பன்னிரு கரங்கள் தாங்கும் பரம தயாளுவின் சோதனைகளையும், கிருஷ்ணனின் கோலாகலத்தையும், எம்பிரானின் லீலைகளையும், வேலைகளையும் எண்ணி மகிழ்ந்து மதப்பித்து ஏறி, எண்ணத்தில் ஊறி அலைந்தாய். நம் நாடு நலிந்து கெடுவதை நீ கண்டாயில்லை. 60,000 பெண்களை மணந்தவன் வரலாற்றையும், கற்பெனப் படுவது தீக்குழித்துக் காட்டினால் தான் ஏற்கப்படும் என்ற 'சீரிய?' கருத்துடைய (இராம) வனுடைய கதையையும், கணவர்க்குற்ற இடரைக் களையாமல் ஆறாவதாக ஓர் ஆடவனை விரும்பிய 'நல்லவள்?!' பாஞ்சாலியின் கதையையும் புகழ்கின்றாய்! ஒன்றே—குலம் ஒருவனே—தேவன் என்ற சீரிய கொள்கையைக் கடைப்பிடித்த தமிழ்ப் பெரு மக்கள் எங்கே? நீ எங்கே! பல தெய்வ வழிபாட்டையும், பலப்பல சாதிப் பாகுபாட்டையும்கற்பித்துக்கூறும் சாஸ்திர, ஸ்மிருதி, ஆகம, தேவார, திருவாசகங்கள் பண்டைத் தமிழ் மரபுக்கே புறம்பானவை. இவைகளைப் போற்றும் நீ எங்கே?! யோசி ஆற அமர.

பழைய நின் பண்பினைப் பார் ஏடு கொண்டு, பகுத்தறிவுக் கண் கொண்டு. இம்மண்ணில் புதுக் கருத்துக்கள் மின் வேகத்தில் மிளிறுவதைப் பார். பிற நாடுகளை நோக்கு. விஞ்ஞான விநோத விளையாட்டைப் பார். ஏரோப்பிளேன்கள்!—இவை போல் நமது பூலோக மக்கள் தேவலோகம் செல்ல புஸ்ப விமானம் போன்ற எத்தனையோ 'ரகங்கள்' முன் உள்ளன, எனப் புராண வியாக்கியானம் கூறாதே. ஏழைக்கு இனிய வாழ்வு, வைதீகத்திற்குச் சாட்டை, சவுக்கடி. விதவைக்கு நல் வாழ்வு கலப்பு மணம்-இவைகளை ஆதரி. ஆவன செய். காலக் கருத்துக் கிணங்க பழைய சட்ட திட்டங்களை மாற்றி அமை. 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் சீரிய எழுத்தை நோக்கு. பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்தவன்.... ..." மனுஸ் மிருதி அத் 1 சு 100 நம்மை ஆளும் சட்டத்தைப்பார். நினைக்க நினைக்க துக்கம், வெட்கம் வரவில்லையா உனக்கு. பொன்னும் பொருளும் உண்டு உன்திராவிடத்தில். அவைஆரியனால், அன்னியனால், வடநாட்டானால் சுரண்டப்படுவதை நோக்கு. உன் நாட்டில் இயந்திரத்திற்குச் சாவு மணி கொடுத்து உன்பொன், மணி, பொருள் பிறநாடு போவதை நீ கண்கொண்டு கண்டு களிக்காதே.

பின்?.........!

தன்னலங்கருதாத் தலைவர், தன்மானக் கட்சி அண்ணல், ஈரோடு தந்த வள்ளல் ஈ. வே. ரா. காட்டும் வழிநட, உறுதியுடன் உற்சாகத்துடன். அவர் காட்டும் வழி மாலை வேலையில் சோலையில் நடக்கும் வழியல்ல. கருத்தழியாதே கஷ்டங்கண்டு. சோர்வடையாதே உளம் நொந்து. முன் நாளில் பெரியார் இட்ட கட்டளைக்குப் பணிந்து "சிறைச்சாலை என்ன செய்யும்?" என்று எக்காளமிட்டுச் சிறைச்சாலையடைந்து தம் இன்னுயிரைத் தமிழ்த் தாய்க்கு அர்ப்பணித்த தாளமுத்து-நடராஜன் போன்றவர்களின் உண்மைத் தியாகத்தால் அன்றொரு நாள் நம் பைந்தமிழுக்கு வந்த இடர் களையப்பட்டது. மறக்காதே. முன்னாள், புத்தர் இயக்க வளர்ச்சிக்கு ஒரு அசோகன்! ஏசுநாதர் கருத்துக்கு அரண் செய்ய ஒரு செயிண்ட் பால்! காரல் மார்க்ஸ் வகுத்த வழியில் புது உலகச் சித்திரம் தீட்ட ஒரு லெனின்! வீரர் லெனின் தீட்டிய திட்டத்தை நிறைவேற்ற ஒரு ஸ்டாலின்! இது போல் இன்று நம் திராவிடத் தந்தை கொள்கைக்கு எத்தனைத் திராவிடக் காளைகள்!—திட்டத்தை உருவாக்க.

எனவே, இதுசமயம் நாம் வேண்டுவது ஒன்று. நாடு நலனுற, வளனுற, இன்னல் தீர, வளமார் எமது திராவிடம் எமது ஆகவேண்டும். இதற்குப் பெரியார் காட்டும் வழி நடந்து, 'அடைந்தால் திராவிடம்; இல்லை இடுகாடு என்று சூழ் உரைத்துப் பாடுபட்டால் நாம் அண்மையில் திராவிட முரசு கொட்டக் கேட்போம். "அந்த நாளும் வந்திடாதோ!"—என்ற ஒரே நோக்கம், ஒரே கீதம் தான் நமக்கு.

## திருமண அழைப்பு

நீடாமங்கலம் அடுத்த பெரம்பூரில் 21-3-48 ஞாயிறு காலை 9 மணிக்கு திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் த. வீர். இராமசிவம்—நாகரெத்தினம் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். இயக்க அன்பர்கள் அனைவரும் வருக!

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மூட நம்பிக்கை.

—:இங்கர்சால்:—

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

★

மூட நம்பிக்கை யென்றால்........?

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மதிப்பையளிக்காது, காரணமின்றித்தோன்றும் சந்தர்ப்பங்களே உலகைச்சூழ்ந்திருப்பதாக நம்பி, சிந்தனைக்கும் செயலுக்கு முள்ள உறவை மதிக்காது, வேதாந்தம், நடக்க முடியாதது, கனவு ஆகியவைகளை உண்மையென எண்ணி, இயற்கைக்கு அப்பால் ஏதோயிருப்பதாகக் கூறுவதே மூடநம்பிக்கை!

மூடநம்பிக்கையின் அடிப்பீடம் அறியாமை, நம்பிக்கையின்மைதான். மூடநம்பிக்கை ஏழ்மையின் பிறப்பிடம். அறியாமையின் குழந்தை.

ஒவ்வொரு மனித மூளையிலும் இயற்கையைக் கடந்த ஒன்று இருக்கிறது என்ற தெளிவற்ற, குழப்பமான நிலையிருப்பதைக் காணலாம்.

பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருக்கும் பெண்மணிதான் கழுவிக் கொண்டிருக்கும் துணி கீழே விழுந்தால், "நண்பர்கள் வருகிறார்கள்" என்று கூறுகிறாள்! கையிலிருந்து கழுவும் துணி கீழே போட்டதற்கும், நண்பர்கள் வருவதற்கும் சம்பந்த மிருக்க முடியாதென்பதை அநேகமாக யாவரும் ஒத்துக் கொள்ளுவார்கள். துணி விழுவதற்கும், அதனால் நண்பர்கள் வருவ்தற்கும் எந்த விதத்திலும் தொடர்பு இருக்க முடியாது.

தன் இடது தோளுக்கு மேல் தற்செயலாக அமாவாசைச் சந்திரனைக் காண்பவன் 'இது கெட்ட காலத்துக்கு' என்கிறான்! தனது இடது அல்லது வலது தோளுக்கு மேல் சந்திரனைக் காண்பதால், அல்லது காணாமலிருப்பதால் சந்திரனுக்கு எவ்விதக் கேடும் ஏற்பட முடியாது, அதனால் சந்திரன் பூலோகத்தில் மாறுதலைச் செய்வதென்பதும் இயலாது. நிச்சயம் இடது தோளுக்குமேல் அவன் சந்திரனைக் கண்டால் இயற்கை நிகழ்ச்சிகளில் எந்தவித மாறுதலும் ஏற்பட இயலாது. அவன் வலது அல்லது இடது தோளுக்கு மேல் சடேரெனச் சந்திரனைக் காணும்படி நேர்ந்ததால் இயற்கை நிகழ்ச்சிகளில் எந்தவித ஏமாற்றமும் ஏற்பட ஒருபோதும் இயலாது.

ஒரு மலரின் இதழ்களை ஒரு பெண் முதல் இதழ் "அவன் வருகிறான்", இரண்டாவது இதழ் "அன்புச் சொற்களைக் கூறுகிறான்" மூன்று "குலாவுகிறான்" நான்கு "மணம் செய்து கொள்கிறான்" அய்ந்தாவது இதழ் "சென்று விடுகிறான்" என்று சொல்லிக் கொண்டே எண்ணுகிறாள்.

இந்தப் பெண்ணின் காதல் அல்லது கல்யாணத்தை யொட்டி இதழ்களை இவள் எண்ணும் அந்த மலர் வளரவில்லை. அத்துடன் அவளுக்காக இத்தனை இதழ்கள் தான் இருக்கும் என்றும் உறுதி செய்யப்பட்டதல்ல. அத்துடன் அந்தக் குறிப்பிட்ட மலரைக் கொய்ய அவள் கைகளை நீட்டும்ப்டி ஏதாவது விசேஷ அறிவு வழிகாட்டியதா என்றால் அப்படியுமிருக்க முடியாது. அதுபோலவே ஆப்பிள் பழத்திலுள்ள விதைகளை எண்ணிக் கொண்டே தனிப்பட்ட மனிதனின் இன்பத்தையோ, துன்பத்தையோ அல்லது எதிர்கால வாழ்வையோ எந்த விதத்திலும் நிர்ணயித்துக் கூறமுடியாது!

இந்தநாள் நல்லதல்ல, இந்த எண் சரியல்ல, இந்தக்குறி பொருந்தாது, இந்தநகை இடர்விளைவிக்கும் என்ற நம்பிக்கைகளுக்கு, எண்ணற்ற மக்கள் அடிமையாகியிருக்கின்றனர்.

மணம் செய்து கொள்ளவோ, ஊர்ப்பயணம் செல்லவோ, நல்ல காரியம் செய்யவோ வெள்ளிக்கிழமை நல்லநாளல்ல என்று பலர் கருதுகின்றனர். அவர்கள் கூறும் காரணம் 'வெள்ளிக்கிழமை துரதிர்ஷ்ட நாள்' அவ்வளவுதான்.

ஏனைய நாட்களைவிட வெள்ளியன்று கடற்பிரயாணம் துவக்குவதால் காற்று, அலை ஆகியவைகளில் மாற்றம் விளைவதென்பது முடியாது. இதுபோலவே பதின்மூன்று பேர் சேர்ந்து பந்தியில் உட்காரக்கூடாது-அது நல்லதல்ல என்று பலர் நம்புகின்றர். 13 கெட்ட எண்என்றால், 26 அதைவிட இரண்டு மடங்கு கெட்டதாக 52 நான்கு மடங்கு அபாயகரமாகவல்லவோ கருதப்படவேண்டும்? பதின்மூன்று பேர் சேர்ந்து உண்டால் அதில் ஒருவர் அந்த ஆண்டுக்குள் இறந்து விடுவாராம்! பதின்மூன்றாம் நம்பருக்கும் சாப்பிட்டவர் உணவு செறிப்பதற்கும், தனிப்பட்ட வியாதிகளுக்கும் அந்த நம்பருக்கும் என்ன உறவு இருக்க முடியும்?

உப்பை மாற்றினால் துரதிர்ஷ்டமாம். ஆனால் காடியை (Vinegar) வடிகட்டினால் இல்லையாம்! உப்புக்கு இருக்கும் குரோதம், காடிக்கு மட்டும் ஏன் தான் இல்லையோ? தியேட்டருக்கு வரும் முதலாவது ஆள், கோணல் கண்ணனாக இருந்து விட்டால் அன்று கூட்டம் கூடாதாம்! தற்செயலாக முதலில் வந்த கோணல் பார்வைக்காரனின் கண்கள் எப்படித் தான் மக்களுடைய மனதை மாற்றியதோ தெரியவில்லை! அல்லது எப்படித் தான் மக்களின் ஏகோபித்த எண்ணம் அவனை முன்னர்ப் போகும்படி அங்கு விரட்டியதோ தெரியவில்லை! ஆகவே இந்தக் காரணம் கொண்டுதான் அந்தக் காரியம் ஏற்படுகிறது என்ற உறவை நம்மைப் பொறுத்தவரையும் காண முடியவில்லை.

சிவதாதுக்கல்லைப் போட்டுக் கொண்டால்துரதிர்ஷ்டம். ஆனால் செந்நிற மாணிக்கக்கல்லை அணிவது உடலுக்கு நன்மை பயக்குவதாம்! எப்படித் தான் இந்தக் கற்கள் எதிர்காலத்தைப் பாதித்து, நிகழ்ச்சிகளைப் பாழாக்கி, காரியங்களைத் தோல்விக்குள்ளாக்குகிறது என்பதுஒருவருக்குமே தெரியாது; புரியாது.

இதுபோன்ற எண்ணற்ற அதிர்ஷ்ட, துரதிர்ஷ்ட சகுனங்களும், நடக்கப்போவதை முன் கூட்டியே அறிவிக்கும் 'சோதிடங்களும்' மலிந்து கிடக்கின்றன. ஆனால்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

ரோஜா முத்தையா

வினைத் திட்டம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற.

—திருவள்ளுவர்.

# குடி அரசு

13—3—48 சனிக்கிழமை.

## சர்க்கார் தடை உத்தரவும் திராவிடர் கழகமும்.

★

கருஞ்சட்டைப் படையின் மீது நம் மாகாண சர்க்கார் இந்த மாதம் 2-ம் தேதி தடை விதித்ததை யொட்டி 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை மாகாணத்தின் தலைநகரிலும் மற்றைய இடங்களிலும் நூற்றுக்கணக்கான (கழகங்கள் வீடுகளில்) சோதனையைப் போலீசார் நடத்தியிருக்கின்றார்கள் என்பதையும், சோதனை செய்த இடங்களில் "அபாயம்" "எதிர்ப்பு" என்ற தலைப்பில் அடங்கும் பொருள்கள் எதுவும் இல்லை என்பதைப் போலீசாரே கண்டறிந்து எழுதிக் கொண்டு போயிருக்கின்றார்கள் என்பதையும், பலாத்காரத்திற்குப் பயன்படுத்தும் ஆயுதங்களோ, அதற்கான திட்டங்களோ யாதொன்றுமில்லை என்பதைத் தெளிவாக அறிந்த பிறகும்கூட, பல இடங்களில், வெறுங்கையோடு திரும்பி ஏமாற்றத்தை எப்படி வெளிக்காட்டிக்கொள்வது என்ற புத்தியோடு அங்கங்கு அகப்பட்ட சில புத்தகங்களையும், வாரத்தாள்களையும், திராவிடர் கழக ரிக்கார்டுகளையும் மூட்டை கட்டிப் போலீசார் எடுத்துப் போயிருக்கின்றார்கள் என்பதையும் பொது மக்கள் அனைவரும் அறிவார்கள்.

சர்க்காரின் இந்த உத்தரவு ஆராயாமல், மேல் வாரியான நோக்கோடு போடப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையில் கருஞ்சட்டைப்படை என்பதே தனியாக ஒரு ஸ்தாபனமாக இல்லை என்றும், திராவிடர்கள் தம் இழிவு நீக்கத்தின் அறிகுறியாகக் கருப்புடையை அணிந்து வர என்னால் கேட்டுக் கொள்ளப்பட்டு, ஆண்களும் பெண்களும் அணிந்து வருகிறார்களே ஒழிய படைக்கான உடையோ, படைப் பயிற்சியோ இல்லை என்பதைச் சர்க்காரே உணர்ந்திருக்க வேண்டும் என்றும், இந்தத் தடை உத்தரவால் திராவிடர் கழகத்தின் நிலை எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும், எப்போதும் போலக் கழகத் தோழர்கள் பொறுமையைக் கையாண்டு சமாதானத்திற்கு விரோதமின்றி நடந்து கொள்ளவேண்டுமென்றும் திராவிடத் தந்தை பெரியாரவர்கள் பிறப்பித்த அறிக்கையைப் பொது மக்களும், சர்க்காரும் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வறிக்கையின் பின் கழகத் தலைவர் தோழர் வேதாசலமவர்களின் 2 நாள் இடையிட்ட அழைப்பில் 7ம் தேதி சென்னையில் கூடிய மத்திய திராவிடர் கழகம், திராவிடக் கழகத்தின் நிலையைத் தெளிவுபடுத்திக், கழகத் தோழர்கள் எப்படி எப்படி நடந்து, இயக்கத்தை வளர்த்துவர வேண்டுமென்று வழி காட்டியிருப்பதைத் தோழர்கள் கவனத்தோடு படித்து உணர்ந்திருப்பார்கள் என நம்புகின்றோம்.

சர்க்கார் தொடுத்திருக்கும் போராட்டம் எங்கெந்த வழிகளில்? அதனுடைய விளைவு—பலாபலன் எப்படியிருக்கும்? இதை இந்தக் கட்டத்தில் நாம் அனுமானிப்பதைக் காட்டிலும், எதையும் நாம் அநுபவிக்கத் தயார்! ஆராய்ந்து துணிந்து தெளிந்த பாதையில், ஆர்ப்பாட்டம் மாற்சரியமின்றி, எத்தனை முறை எந்த வகையில் - எதிர்ப்பு ஏற்பட்டாலும், சலிப்பின்றிப் பொறுமையைக் கைக் கொண்டு, அடைவோம் குறிக்கோளின் எல்லையென்று, தர்க்க அறிவும்—உரிமையுணர்ச்சியும்—சமாதானப் போக்குமே கைக்கொண்டு நடந்து வரும் நாம், இச்சந்தர்ப்பத்தை நம்முடைய போக்குக்கு முன்னிறுத்திக் காண்பிக்கவல்ல கண்ணாடியாகவே கொள்வோம் என்பதை ஆணையிட்டு உறுதிகூறுவோம் என்பது மட்டும் தெளிவு.

உத்தமர் காந்தியாருடைய படுகொலையின் விளைவாக இந்திய சர்க்கார், ரா. சு. சே. சங்கத்தை படுகொலை நடந்த 3 நாட்களில் சட்ட விரோதமென்று பிரகடனப்படுத்தினர். அந்த வாரத்திலேயே முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த படையையும் சட்ட விரோதமென்று அறிவித்தார்கள். மத்திய சர்க்காரின் இவ்வுத்தரவுகளுக்குப் பின் நம் மாகாண சர்க்கார் சென்ற மாதம் 6ல இந்த மாகாணத்திலுள்ள கம்யூனிஸ்ட், முஸ்லிம்லீக் ஸ்தாபனங்களைச் சேர்ந்த 10 தொண்டர்படை நிலையங்களை, ஊர்வலம் கூட்டம் நடத்துவதிலிருந்து அணிவகுப்புவரை நடத்தக் கூடாதென்று தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்தத்தடை உத்தரவுக்குப்பின் 25 நாள் கழித்து, கருஞ்சட்டைப் படை ஸ்தாபனம் சட்ட விரோதமென்று அறிவித்திருக்கிறது. மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார்களின் இந்தப் போக்கைப் பொது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பது நம் விருப்பம்.

காந்தியாரைக் கொன்ற சதிக் கும்பலின் ரகசிய நடவடிக்கைகளை நன்றாகவே தெரிந்து கொண்டிருந்த இந்திய சர்க்கார், இந்துமகா சபையைச் சேர்ந்த ரா. சு. சே. சங்கத்தை மட்டும் [மகாசபையை விட்டு விட்டு] மூன்று நாள் கழித்துச் சட்ட விரோத மென்று கூறியது ஏன்? ரகசியமாகச் செய்த ஏற்பாடுகளை மறைத்துவிட-அழித்துவிட பயன்படுத்திக் கொள்ளட்டும் என்ற கருத்து சர்க்காருக்கே இருந்தது என்பதாகத் தானே 3 நாள் தாமதம் உணர்த்துவதாயிருக்க முடியும். காந்தியார் படுகொலையடைந்தவுடன் நாட்டில் எழுப்பப்பட்ட ஆடம்பரக் கூச்சல்களையும், இப் பொழுது கிணற்றில் கல் போட்டது மாதிரி எந்தவிதமான பேச்சும் கொலை காரனைப் பற்றியும், சதியைப் பற்றியும் பொது மக்களுக்குச் சர்க்கார் கூறாதிருக்கும் அடக்கமான நிலைமையையும்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கொலை பாதகத்துக் கஞ்சாத இந்து மகாசபை இன்னமும் சட்ட விரோதமானதென்று அறிவிக்கப் படாதிருக்கும் நிலைமையையும் சேர்த்து எண்ணும்போது, மத்திய சர்க்காரின் ஆட்சிப்பீடமே இந்து மகாசபையின் கைப்பாவையோ என்ற எண்ணத்தைத் தானே பொதுமக்களுக்கு உண்டு பண்ணுவதாயிருக்க முடியும்?

சதியைப் பற்றிய முழு விபரங்களுமடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும், வரும் வழியில் ரயிலிலேயே போலீசாரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டது என்ற தேசியப்பத்திரிகைகளின் செய்தியையும்சேர்த்துப் பார்க்கும்போது, பொது மக்களின் எண்ணம் வலியுறுத்தப்படுவதாக ஆகமாட்டாதா என்று கேட்கிறோம்.

இப்படி, கொலை செய்த கொலைகாரர்கள், சதியில் சம்பந்தப்பட்ட சத்புருஷர்கள், தப்பித்துக் கொள்வதற்கு 3 நாள் தவணை கொடுத்த மத்திய சர்க்கார் போக்கையும், கொலை நடந்த 32 நாட்களுக்குப் பிறகு அந்தக் கொலைக்கோ, மத வெறிக்கோ, வகுப்பு வெறிக்கோ காரணமாக இருந்ததென்று எண்ணவு முடியாத திராவிட கழகத்தைச் சேர்ந்த கருஞ்சட்டைப்படை அமைப்பின் மீது தடை விதித்திருக்கின்றோம் என்ற மாகாண சர்க்காரின் போக்கையும் பொது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திராவிடர் கழகம் வகுப்புத் துவேஷத்தை ஊட்டுகிறது, வளர்க்கிறது. அதனால் அந்த ஸ்தாபனத்திற்கு ஒரு படை இருக்கக் கூடாது என்று உண்மையாகவே நம் மாகாண சர்க்கார் கருதியிருந்தால், அதனுடைய கருத்தில் பட்ட அந்தப் படையின் மீது எப்பொழுது தடைவிதிக்க வேண்டும்? குற்றத்தைக்கண்டு அதைக் களைய வேண்டும் என்பதிலே அக்கறையும், நீதியும் உடைய அரசாங்கமாயிருந்தால், சென்ற மாதம் 6-வ பிறப்பித்த தடை உத்தரவிலேயே சேர்த்திருக்க வேண்டுமல்லவா? அப்படிச் சேர்க்காததிலிருந்து இந்த மாகாண சர்க்காரின் நிர்வாகம், "நியாயத்தைப் பேணாதது" 'வருமுன் காக்கும் புத்தியில்லாதது'' என்று பொது மக்கள் எண்ணுவார்களானால் அதில் தப்பு என்ன?

தடை உத்தரவைக் கருஞ்சட்டைப் படைமீதுபோட்டிருக்கின்றோம் என்பதைக் கேட்கும்போது தான், இந்த மாகாண சர்க்கார், நியாயத்தைப் பேணாதது, வருமுன் காக்கும் புத்தியில்லாதது என்பது மட்டும் அல்ல, இல்லாததை உண்டு என்று கருதும் ஏமாளிகள் சர்க்காராகவுமிருக்கிறதே! என்று தானே பொதுமக்கள் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கின்றது.

இல்லாத படையின் மீது 32 நாள் கழித்து இந்தச் சர்க்கார் தடைவிதித்திருக்கிறதென்றால், இந்த உத்தரவு சுயபுத்தியோடு போட்ட உத்தரவு இல்லை என்று மட்டும் தான் நாம் பொதுமக்களுக்கு வற்புறுத்திச் சொல்ல முடியும். மத்திய சர்க்கார் எப்படி இந்துமகாசபையின் கைப்பாவையாக இருக்கிறது எனப் பொது மக்களாகிய நீங்கள் புரிந்துகொண்டிருக்கிறீர்களோ, அதைப்போலவே மாகாண சர்க்காரும் பார்ப்பனீயத்தின்—பாஸிஸத்தின்— கைப்பாவையாக இருந்து வரவேண்டியிருக்கிறது—இல்லாத போனால் தங்களுடைய கொலைபாதகத் தன்மை அம்பலப்படுத்தப்படுகிறதே என்ற பொச்சரிப்பினால் இந்துப் பத்திரிகையும், சில பார்ப்பனர்களும் திராவிடக்கழகத்தின்மீது போட்ட கூச்சலுக்காக, இல்லாத படையைக் கண்டுபிடித்துத் தடை விதிக்கும் ஏமாளிகளாகவோ எத்தர்களாகவோ ஏன் ஆகவேண்டும்? என்று பொதுமக்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறோம்.

தடைவிதித்த முதற் சடங்கினால் சோதனை என்ற 2வது சடங்கும் நடந்து முடிந்திருக்கிறதே. இந்தச் சோதனைகளால் வெளியான உண்மை என்ன? சர்க்கார் தடை உத்தரவைத் தெரியாமல் விதித்தார்கள் என்றால்,போலீசார் சோதனையை புரியாமலே செய்திருக்கின்றார்கள். ரா. சு. சே சங்கத்தைப்போல, மற்றபடை அமைப்புகளைப் போல ஏதாவது ஆயுதங்கள் இருக்க வேண்டுமென்றோ, படைப்பயிற்சி முறை இருக்கவேண்டுமென்றோ தான், தடை உத்தரவைப் பெற்ற போலீசார் எண்ணியிருக்க வேண்டும். சோதனை செய்த போலீசார் துருவித் துருவி ஆராய்ந்து கோவணத் துணியைக் கண்டுபிடித்தார்கள் என்றுகூட செய்தி வந்திருக்கிறது. பலஇடங்களில் ஆட்சேபகரமான பொருள் ஒன்றுமில்லை என்று எழுதிக் கொண்டு போயிருக்கிறார்கள். சில இடங்களில் இயக்கப் புத்தகங்களையும், பேப்பர்களையும், திராவிடர்கழக சம்பந்தமான நடவடிக்கைப் புத்தகங்களையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். போலீசார் இந்த மாதிரி சில இடங்களில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு அர்த்தம் என்ன சொல்ல முடியும்? சர்க்காரின் மலை போன்ற முட்டாள் தனத்தைப் போலீசார் உள்ளங்கையைக் கொண்டு மறைக்க முயற்சித்தார்கள் என்பதுதானே இதற்கு நேரான அர்த்தம்?

பெரிய குளம், மணலூர்ப்பேட்டை, மாங்காடு, மானாம்பதி, அரகண்ட நல்லூர், திருவண்ணாமலை போன்ற சில ஊர்களில் பறந்து கொண்டிருந்த கழகக் கொடிகளைப் போலீசார் இறக்கினார்களாம். பட்டிவீரன் பட்டியிலுள்ள புத்திசாலிகளோ கொடிக் கம்பத்தோடு பிடுங்கிக் கொண்டு போனார்களாம். இந்த அர்த்தமில்லாத—அக்கிரமமான நடவடிக்கைகளைக் கண்டும் அமைதி காட்டிய நம் தோழர்களை நாம் உள்ளன்புடன் பாராட்டுகிறோம். போலிஸாரின் இந்த நடவடிக்கை எந்தச் சமாதானப் போக்குடையவர்களையும் புண்படச் செய்யும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் போலீசார் இதற்

# பெரியார்.

★

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

14-3-48 மதராஸ் மயிலைதிருவள்ளுவர் கழக ஆண்டு விழா.
15-3-48 காவேட்டி ரங்கம்பாளையம் (சேலம் ஜில்லா)
16-3-48 போத்தனூர் (சேலம் ஜில்லா)
17-3-48 இனுங்கனூர் (திருச்சி ஜில்லா)
18-3-48 மணப்பாரை (திருச்சி ஜில்லா)
19-3-48 புளியஞ்சேரி (தஞ்சை ஜில்லா)
20-3-48 திருமருகல் (தஞ்சை ஜில்லா)
21-3-48 காலை—நாகை. மாலை—சிக்கல்.

குக்காரணமல்ல; எய்தவன் இருக்க அம்பை நொந்துகொள்ளலாமா என்று தான் நாம் நம் தோழர்களுக்குக்கூற வேண்டியதிருக்கிறது.

தங்கள் நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பித்தலாட்டக்காரர்களின் வாய்ப் பேச்சைக் கேட்டு, ஆராய்ந்து பார்க்காமல் தடை உத்தரவு போட்டு, ஏமாந்து போய் முகத்தில் கரிபூசிக்கொண்ட சர்க்கார் இனியாவது உண்மையை உணருமா? தடை உத்தரவை வாப்பீஸ் பெறுமா? இல்லை. தன்னுடைய அறிவீனமான போக்கையே கடைசிவரையிலும் சாதிக்குமா?

இது எப்படிப்போனாலும், திராவிடக் கழகக் கொடிகளையும் நடவடிக்கைப் புத்தகங்களையும், போர்டுகளையும், சட்டைகளையும் உடனே போலீசார் திருப்பிக் கொடுத்துவிட உத்தரவு செய்ய வேண்டுமென்றுமட்டும், நாம்நமது மாகாண சர்க்காருக்கு ஆலோசனை கூறுகிறோம். பார்ப்பனீயத்தைப் போலப் பசப்பான மொழிகளில் நம் ஆலோசனை அமையவில்லை என்பதை உணருகிறோம். அதனால் பார்ப்பனீய ஆலோசனைக்குச் செவிமடுத்த சர்க்கார், நம் ஆலோசனைக்குச் செவிகொடுக்குமா? என்று தோழர்கள் கேட்கலாம். உண்மை உழைப்பாளிகளான ஏழைகளின் குரலுக்குக் கேட்கும் காதா? கேளாக் காதா? என்பதை நாம் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

இனி நம் தோழர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? இதை நமது தந்தை பெரியாரவர்கள் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். மத்திய திராவிடர் கழகமும் அந்தத் தெளிவை விரிவுபடுத்தி விளக்கியிருக்கிறது. எப்பொழுதும் போல இயக்கப் பிரசாரத்திலீடுபடுங்கள்! தீவிரமாக ஈடுபடுங்கள்!! அங்கங்கும் கிளை நிலையங்களை உண்டாக்குங்கள்! அவற்றைப் பெருக்குங்கள்!! அங்கத்தினர்களைச் சேருங்கள்! ஊருக்கு ஊர், தாலுக்காவிற்குத் தாலுக்கா, ஜில்லாவிற்கு ஜில்லா போட்டி போட்டு அங்கத்தினர்களைச் சேருங்கள்!! சமுதாய இழிவைச் சகியோம் என்பதை உணர்த்த, கருப்புச் சட்டை மட்டுமல்ல கருப்புடையே அணியுங்கள்! இழிவு நீங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால், தேவடியாள் பிள்ளை என்ற பட்டம் தேய்ந்தொழிய வேண்டுமென்றால், ஒதுக்கப்பட்டவன் நான் அல்ல உரிமையுடையவன் என்ற உணர்ச்சியிருந்தால், ஒவ்வொரு திராவிடனும் கருப்புடையே அணியவேண்டுமென்று கட்டாயமாக எடுத்துக் கூறுங்கள்!!! எடுத்துக் கூறும் மொழித் திறமை எங்களுக்கில்லையே என்று ஏங்காதீர்! உங்கள் உள்ளத்தில் உள்ளதை உங்கள் மொழியிலே உரையுங்கள்! அதுவே பெரியார் பேச்சாகும்! ஆனால் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் சட்டத்திற்குக் கீழ்ப்படிய, அமைதியைக் காக்க, சமாதானத்தை நிலை நாட்ட மறவாதீர்! இதைத்தான் நாம் இப்பொழுது தோழர்களுக்கு வற்புறுத்திச்சொல்ல ஆசைப்படுகிறோம்.

மேலும், கலவரம் காலித்தனம் செய்தே சர்க்காரைக் கைப்பற்றிய கட்சியுடைய இந்த நாட்டில், பித்தலாட்டம், நயவஞ்சகம் பேசியே வாழ்ந்து வரும் சமுதாய அமைப்புடைய இந்த நாட்டில்—நம் சொந்த நாட்டில்—காலித்தனம் பித்தலாட்டம் தொலைய வேண்டுமானால், அது திராவிடர் கழகம் ஒன்றால் தான் முடியும்—முடியவேண்டும் என்பதைச் செயலில் தீவிரமாகக் காட்டுங்கள் எனவும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இந்த நாட்டில் புதிய விழிப்படைந்த—சுரண்டலற்ற சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால், எண்ணற்ற உடலங்கள் கோட்ஸே கும்பலுக்குப் பலியாக்கப்பட வேண்டுமென்பதை வாழ்விலும் நூலிலும் உணர்ந்த இளஞ்சிங்கங்களே! உங்கள் வாழ்வைப் பெரிதென்றெண்ணாதீர்! மாட்ட நினைக்கும் சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று பாடிய கவிஞனின் மொழி-இறவாத மொழி என்பதையும், அதுதான் உரிமை உணர்ச்சிக்கு, அநீதியான ஆணவக்காரச் சர்க்காரால் தரப்படும் சின்னஞ் சிறிய பரிசு என்பதையும் நினைவில் வையுங்கள்! நம் தந்தையின் காலத்திலேயே நாம்இந்த இழிவை எந்த விலைகொடுத்தாவது போக்காவிட்டால், நம்மைப் போன்ற அறிவிலிகள், வஞ்சகர்கள், ஏமாற்றுக்காரர்கள் இந்த உலகத்திலேயே இருந்ததில்லை என்பதை எதிர்கால நம் சந்ததியே படித்துப் பார்த்துத் தலை கவிழும் என்ற நிலையை எண்ணிப் பாருங்கள்!! என்றும் இந்த நேரத்தில் மிகமிக வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

பார்ப்பனீயம் அடைந்திருக்கும் இந்த வெற்றி—தடையுத்தரவைக் கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை. காந்தியாரைக் கொன்ற நமக்கு திராவிடர் கழகத்தின் சீரழிப்பதா பெரிய செயல் என்று, உண்மையாகவே பார்ப்பனீயம் எண்ணுகிறது என்றுதான் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. ஏன்—தந்தை பெரியார் அவர்களையே ஒழித்துவிடலாமென்று கூட அது நினைக்குமானால் அதனுடைய இயல்புக்கு அது மாறுபட்டதல்ல. அவ்வாறு ஒழிக்கப்பட்டாலும் கூட அது யாரும் ஆச்சரியப்படுவதற்குரிய சங்கதி இல்லை. ஆனால் அந்த நிலைமை என்னவாகும்? பார்ப்பனத் தோழர்களுக்குச் சுருக்கமாகக் கூறுகிறோம். காந்தியாரைக் கொன்றவன் ஒரு பார்ப்பனனாக இல்லாமல், ஒரு முஸ்லிம்—அல்லது முஸ்லிமுடையதூண்டுதல் என்கிற நிலை இருந்தால் இந்த நாட்டின் வரலாறு எப்படி எழுதப்பட்டிருக்கும்? என்ற கேள்வியைத் தான் சுருக்கமாகக் கேட்க விரும்புகிறோம். இது நடக்காத சங்கதியே தவிர நடக்கக்கூடாத சங்கதியல்ல. இந்த நடக்காத சங்கதியைத் தான், நாம் நடக்கவேண்டாம் என்று எண்ணுகிற செயலுக்கு எடுத்துக் காட்டிக் கூறுகிறோம்.

இன்று காந்தியார் மறைவுக்குப் பிறகு இந்த நாட்டு முஸ்லிம் அரசியல் தலைவர்களுடைய வீரப்பிரதாப உரைகள் எல்லாம் போய், எப்படியாவது பல்லிளித்து வாழ வேண்டும்; பதவிகளைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்ற நிலை வந்திருப்பது போல, முஸ்லிம் பொதுமக்கள் இந்துக்களின் அடக்குமுறைக்குப் பலியாகி, இந்த நாட்டிலே பிறந்து ஆண்ட பரம்பரையின் சந்ததி என்ற உரிமையுணர்ச்சியை மூட்டை கட்டி வைத்து விட்டு, அய்யோ! காந்தியார் இருந்தால் இந்தக்கதி வருமா என்று ஏங்கித் துடிதுடிக்கும் நிலைமை தான்—ஏற்பட்டிருக்கின்றதென்றால், இந்த நாட்டிற்கு லம்பாடிக் கூட்டமாக வந்த, நயவஞ்சகம் தவிர வேறு ஒரு நன்மையும் இந்த நாட்டிற்குச் செய்தறியாத பார்ப்பனீயமே! உன்னால் பெரியார் இராமசாமி ஒழிந்தால் உன் கதி என்னவாகும்? அந்த நிலைமையை உன்

டாக்காதே என்றுதான் பார்ப்பனீயத்திற்கு நாம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெரியார் இராமசாமி அவர்கள் இந்த நாட்டில் இல்லை என்றால், பார்ப்பனீயமே உன்னுடைய கொள்கையைத் தாங்கி நிற்கும் பலர் பதறப்பதற விரட்டப்பட்டு, அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டுப் போயிருப்பார்கள் என்பதை நீ ஏன் உணர மறுக்கின்றாய்? பார்ப்பனீயம் இன்று பதைப்பின்றி வாழ்கின்றதென்றால் அதற்குக்காரணம், பெரியார் இராமசாமியும் திராவிடர் கழகமும் என்பதை அறிந்திருந்தும் கூட, திராவிடக்கழகத்தை வெறுக்கின்றாய்—ஒழித்துவிடப் பார்க்கின்றாய் என்றால் அதன் பொருள் என்ன? உனது கனவு பலியாது என்பதைப் பல முறை நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நான் வாழவேண்டும்! நீயும் வாழ வேண்டும்! நான் மனிதன்! நீயும் மனிதன்! இதைத்தான் பெரியார் கூறுகிறார். திராவிடர் கழகமும் கூறுகிறது. இதை மறுக்காதே! மறுப்பதுதான் வகுப்புத்துவேஷம்! மறுப்பதுதான் அழிவுக்கிழுக்கும்செயல் என்பதை மறவாமல் நினைப்பில் வை! வஞ்சகத்தை விட்டொழித்து விடு! உன்னினம் மட்டும் வாழ வேண்டும் என்ற உன்னலம் கருதும் போக்குக்குத் தலை முழுக்குப் போட்டுவிடு! வா! வா!! மனிதனாக வாழ்வோம்! கைகோத்து வாழ்வோம்!! இதைத்தானே திராவிடக்கழகம் அன்று தொட்டுச் சொல்லி வருகின்றது என்பதையும் நாம் பார்ப்பனீயத்திற்குச் சொல்ல ஆசைப் படுகிறோம்.

## அறிவிப்பு

சென்ற வாரம் முதற்கொண்டு நமது குடி அரசு பத்திரிகை வெள்ளிக்கிழமையே ஏஜண்டுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிக காப்பிகள் தேவையானவர்கள் தயவு செய்து செவ்வாய்க்கிழமைக்குள் நமக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.

### கண்டிப்பான அறிவிப்பு.

மாதாமாதம் ஒழுங்காக நமது பட்டியலுக்கு தொகை அனுப்பாமலும், காப்பியை அதிகப்படுத்தாமலும் இருக்கிற ஏஜண்டுகளை மாற்றி, ஊக்கமும் பொறுப்பும் உள்ளவர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

எந்த எந்த ஊருக்கு ஏஜண்டுகளை மாற்றப்படும் என்பதை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

மானேஜர்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

அறிவுள்ள, பகுத்தறிவு வாய்ந்த ஒவ்வொருவருக்கும் இது நம்பத்தகுந்ததல்ல, முட்டாள்தனமானதுஎன்பது நன்கு விளங்கும்......

சூரிய, சந்திர கிரகணம் ஏற்படுவது வரப்போகும் பஞ்சம், பிணிக்கு அறிகுறி. 'வால் நட்சத்திரம் வந்து விட்டதா? அப்படியானால் நாட்டில் மன்னன் சாகப்போகிறான் அல்லது, நாடுகள் போர் அல்லது பிணியால் அழியப்போகின்றன' என்று பலநூற்றாண்டுகளாக மக்களிடையில் நம்பிக்கை இருந்து வருகிறது.

சந்திர மண்டலத்தைச் சுற்றி வட்டமிருப்பது, வடக்கில் வெளிச்சம் தோன்றுவது, நட்சத்திரப் பொறி விழுவது—எல்லாம் நம் மூதாதையர் மூளையைப்பயத்தால் மூழ்கடிக்கச் செய்தவை! இந்தக் குறிகளைக் கண்டதும், வரப்போகும் ஆபத்தைத் தடுக்க 'ஆண்டவனே காப்பாற்று' என்று மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தனர் நம் முன்னோர்கள்! முகங்களில் பயம் தேங்க, கண்கள் அதன் பலனாகமூட, "கடவுளே காப்பாற்றுவீர்" என்று அவர்கள் கதறும்படியான நிலைமையை இந்தக் குறிகள் உண்டாக்கின.

இப்போதிருக்கும் வைதீக வாதிகள் கூறுவதைப் போலக் கடவுள் போன்று பிரசித்திபெற்றிருந்தகுருமார்கள், கிரகணம், வடக்கில் ஏற்பட்டவெளிச்சம் ஆகியவைகளைக் காட்டி, 'கடவுள் கோபித்துக் கொண்டுவிட்டார், காணிக்கையைச் செலுத்துங்கள், கடவுளின் தூதர்களாகிய எங்களை வணங்குங்கள்' என்ற கபட நாடகத்திற்கு மக்களை ஆட்படச் செய்தனர்.

பூகம்பம், புயல் காற்று ஆகியவையெல்லாம் கோயில்களின் பணப்பெட்டியை நிரம்பும்படி செய்தன. பணத்தைச் சேமித்து வைக்கும் உலோபிகூட, பயத்தால் நடுங்கிய கைகளுடன் தன் பணப்பெட்டியைத் திறந்தான்! கிரகண இருள் கொள்ளையடிப்பவனையும், கொடுங்கொள்கையுடையவனையும் கடவுள்களுடன் தங்கள் லாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளச் செய்தது. ஆனால் ஏழை, யோக்கியன், ஒன்றுமறியாதவன், சூதுவாதறியாத மடந்தையர்ஆகியோர்தங்கள் 'பிரார்த்தனை'ச் செய்யத் தவறியதாலேயே கடவுள் கோபங் கொண்டாரென்று நம்பி, தங்களிடமிருந்த கொஞ்ச நஞ்சக்காசையும் காணிக்கையாகச் செலுத்தினர், கடவுளின் மனதைச் சாந்திப்படுத்த!

தனிப்பட்டவனையோ, நாட்டையோ, மன்னர்களையோ, இந்த 'அதிசய' நிகழ்ச்சிகள்—சகுனங்கள் எதுவும் செய்யாது, செய்யவும் முடியாது. இந்த நிகழ்ச்சிகளுக்கும், மனிதனுக்கும், எறும்புக் கூட்டத்துக்கும், தேன்கூட்டுக்கும், புழுக்களின் மூட்டைகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை, கிடையாது என்பது நமக்கு நன்குபுரியும். வால்நட்சத்திரம், சிதறிய நட்சத்திரப்பொறி, கிரகணம் ஆகியவைகள், பூமியில் மனிதவர்க்கம் இல்லையென்றாலும் ஏற்படக் கூடியதே என்பது நமக்குப் புரியும். அதுமட்டுமின்றி 'இந்த நேரத்தில்தான் கிரகணம் ஏற்படும்' என்று சரியாக முன்கூட்டி நம்மால் கூறவும் கூடும்!

புனிதத் தன்மை வாய்ந்தவர்களின் எலும்பு, மகான்களாக வாழ்பவரிடமிருந்து கிழிக்கப்பட்ட துணியின் துண்டு, ஆத்ம தியாகியின் மயிர், உண்மை மதவாதிகளின் நகம், பல் ஆகிய ஆயிரமாயிரம் பொருள்களெல்லாம் 'புனிதத்தன்மை' வாய்ந்தது என்ற நம்பிக்கை கொஞ்சகாலமுன் வரையில் மக்களிடம் பொதுவாக இருந்தது.


## எங்கள் சென்னை விலாசம்.

★

உங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுங்கள்.

நாதன் கம்பெனி
புத்தகசாலை,
94-C பிராட்வே
(கதிரவன் நிலையம்)
சென்னை.

புத்தக விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

கோயிலுக்குக் காணிக்கையாகக் கொஞ்சம் 'ஏதோ' செலுத்தி விட்டு, எலும்பு, புனிதரின் மயிர் ஆகியவைகள் வைத்து மூடப்பட்ட பெட்டியை முத்தமிட்டதும் பிணி தீர்க்கப்பட்டது என்றும் நம்பப் பட்டது.

கடவுளின் பேரில் உண்மையான நம்பிக்கை வைத்த பிணியாளனை பீடித்திருக்கும் பேயை-பேய்தான் வியாதிக்கு உண்மைக் காரணம் என்பதால் — பெட்டிக்குள்ளிருக் கும் மயிரும், எலும்பும், விரட்டி விடுவதாகவும் நம்பினர். கெட்ட பேய்களே கெடும் வியாதிகளுக்குக் காரணம் என்ற நம்பிக்கை மயிர் மீதும், எலும்பு மீதும் நம்பிக்கை யைக் கொள்ளச் செய்வதற்குக் காரணமாயிற்று. பைத்தியம் பிடிப் பது பிசாசின் வேலை, மனக் கோ ளாறு ஏற்பட்டது சைத்தானின் சேட்டை, என்ற எண்ணம் எழுப் பப்பட்டதோடு, மனிதனுக்கேற்ப டும்ஒவ்வொரு பிணியும், நரகத்தில் வாழும் சைத்தான்களின் வேலை யென்ற எண்ணத்தையும் பிறப் பித்தது. இந்த நம்பிக்கை அமெ ரிக்காவில் மட்டுமல்ல, அகில உலகி லும் நிறைந்திருக்கிற தென்பதோடு நம்நாளில்கூட லட்சோப லட்சம் மக்கள்'புனித எலும்புகளில்'நம்பிக் கைகொள்ளத்தான்செய்கின்றனர்.

ஆனால் இன்று எந்த அறிவு டைய மனிதனும் பிசாசையோ, அதுதான் பிணியைப் பிறப்பிக்கி றது என்பதையோ, புனித மயிர் தான் அதைப் போக்கடிக்கும் என்ற போதனையையோ நம்ப மாட்டான்.

பிச்சைக்காரன் வைத்திருக்கும் மரத்துண்டும், ஞானியின் மரத்துண் டும் ஒன்று தான். புனித எலும்பு சாதாரண மிருகத்தின் எலும்பைப் போன்றதுதான். ஆத்ம தியாகியின் மயிர் வியாதியைத் தீர்ப்பதுபோல வே சாதாரணக் குதிரையின் மயி ரும் தீர்க்கக்கூடும் என்று அறி வுள்ள எவரும் கூறுவார்கள்.

புனிதப் பொருள் என்பதெல் லாம் மத நாற்றமடிக்கும் குப்பை யென்று நமக்குத்தெரியும். ஆனால் புனிதப் பொருள் என்றுகூறி நடந்து கொள்பவர்கள் எல்லாம் வஞ்சக மனத் தினர், அதை உண்மையென நம்பு பவர்களெல்லாம் முட்டாள்கள். அந்தநாள் மதக் குருக்கள் மக்க ளின் காசைச் சுரண்ட ஏற்படுத் திய தந்திர மார்க்கங்களே இவை கள்! [வரும்]

[5ம் பக்கத் தொடர்ச்சி]

படம், புத்தகம், சட்டைகளை மூட் டை கட்டினர்.

**அரகண்டநல்லூரில்:** கழகக் கொடி யைக் கட்டாயப்படுத்தி இறக்கினர்.

**வில்லிவாக்கம் மாதவரத்தில்:** வில்லி வாக்கம் ஜெயராஜ் வீடும், மாதவரம் தேசிங்வீடும்சோதனை. ஒன்றுமில்லை என்று எழுதிப் போயினர்.

**திருச்செங்கோட்டில்:** என். கே. பி. வேல் ஆயில் ஸ்டோர் துருவித் துரு விச் சோதனை. தபால் கார்டு, கவர் களும், மினிட் புத்தகமும், கொடியும் கண்டு பிடித்தார்கள். பரமசிவம் வீடும் சோதனை.

**சூலூரில்:** திராவிடர் கழகமும், கந்த சாமி வீடும் சோதனை. தலைவர் செய லாளர் முகவரியை மட்டும் எழுதிப் போயினர்.

**அருப்புக்கோட்டையில்:** சண்முக சுந்தர முதலான அய்வர் வீடு சோ தனை. சில ரிக்கார்டுகள் எடுத்தார் களாம்.

**நிலக்கோட்டையில்:** கழகம், நூல் நிலையம், நான்கு தோழர்கள் வீடு சோதனை. எவையுமின்றி ஏமாற்ற முற்றனர்.

**வேளை நகரில்:** கிருஷ்ணன், சண் முகம், ஜெகநாதன், திராவிட நேசன், கன்னியப்பன், துரைக்கண்ணு வீடுகள் சோதனை. சட்டையும் ரிக்கார்டுகளும் மூட்டை கட்டினர்.

**குறிஞ்சிப்பாடியில்:** கழகமும் தலை வர் வீடும் சோதனை. ஒன்றும் கைப் பற்றவில்லை.

**மம்சாபுரத்தில்** ஜெயராஜ், லெனின் வீடுகள் சோதனை. மினிட், ரசீது, சட்டை, போர்டுகளை சுமந்துபோனார் கள்..

**திருக்கழுக்குன்றத்தில்:** கழகம் சோ தனை. விசாரணை. எடுத்தது ஒன்று மில்லை.

**சிவகாசியில்:** தங்கையா வீடு சோ தனை. பேப்பர், சந்தா புஸ்தகம், ரப் பர்ஸ்டாம்பு கைப்பற்றல். எஸ். எ. காளி யப்பன் விசாரிக்கப்பட்டார்.

**உடுமலையில்:** திராவிடர் கழகம் சோதனை. ஒன்று மில்லை என்று எழுதிப் போயினர்.

**பென்னாகாரத்தில்:** வி. எஸ். நடே சன், இராமமூர்த்திவீடுகள் சோதனை. மினிட், சர்க்குலர், கணக்கு, கைப்பற் றல்.

**வேளுக்குறிச்சியில்:** ஜி. பி. சோமசுந் தரம் வீடுசோதனை. ஒன்றுமில் லையே என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

**விருத்தாசலத்தில்:** கழகமும் சி. முனு சாமி வீடும் சோதனை. ஒன்றும் இல் லை என்று போயினர்.

## கோயில்
## விபசார விடுதி மட்டுமல்ல!
## கொலைக் களமும்கூட!

அவினாசி தாலுகா உப்பிலிப்பா ளையத்தில் கருப்பராயன் கோயில். அக்கோவில் பூசாரி கருப்பக் கவுண் டன். காற்றுக் குணத்தின் காரண மாய் [?] 2 ஆண்டுகளாய் அசௌக்கிய மாயிருந்த பொங்கிஅம்மாள், கணவன் நாச்சிமுத்துக் கவுண்டனிடம் பூசாரி சீக்கிரமாக வரச் சொன்னார் என்று சொல்லி விட்டு, அணிந்திருந்த நகை களோடு அதற்குமுன் போய் வந்தது போலப் போயிருந்தாராம். போன இடத்திலே என்னென்ன நடந்த தோ. அம்மாள் கருப்பராயன் திருவடி அடைந்தார். அவரின் நகைகள் பூசாரி கைக்குப்போய்விட்டது. அம்மாள் உட ம்பு பக்கத்துச் சோளக்காட்டில் கிடந் தது. முடிவுஎன்ன? கருப்பக்கவுண்டப் பூசாரிக்குத் தூக்குத் தண்டனை என் கிறார் கோவை நீதிபதி கோமன். இந் தப்பூசாரி தொலைந்தால் இன்னொரு பூசாரி வருவானே! இன்னொரு பொங்கி அம்மாளுக்கு எங்கேபோவது? இதற்கு ஒரு முடிவைக்கட்டவேண்டு மென்று நீதிபதி கோமன் எண்ண வில்லை. நீங்களாவது எண்ணுவீர் களா?

## நன்கொடை

பெரம்பூர் தோழர் இராமசிவம் குடி அரசு வளர்ச்சிக்கு அனுப்பிய 1-0-0ம் வரப்பெற்றோம்.

## A. வன்னிய ராஜன்.

விருதுநகர் குடிஅரசு ஏஜண்ட் தோழர் A. வன்னிய ராஜனைக் கழிந்த 10 நாட்களாகக் காணாமல் சென்ற இடம் தெரியாமல் திகைக் கின்றோம். குழந்தை மாமா! மாமா! என்று கதறிக் கதறி உடல் மெலிந்து விட்டது. எங்கிருப்பினும் உடனே வந்து சேருக.

பி. நவமணி நாடார்.

# கருப்பைக்கண்டு கலங்குவோர் கலங்கட்டும்!

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்குப் போதிக்கப்படுகிறது. கீழ் வகுப்பிலிருந்து இறுதி வகுப்புவரை மூடக்கொள்கைகள், சமூகத்தில் ஓர் இனத்தை மட்டும் உயர்வடையச் செய்யும் கொள்கைகள் நிறைந்த கம்பராமாயணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம், குசேலன்கதை; பாரதம், அரிச்சந்திர புராணம் ஆகிய கதைகளும், புராண இதிகாசங்களையும் மாணவர்களுக்குப் போதிக்கும்படி அரசியலார் பாடத்திட்டம் வகுத்துள்ளனர். அப்பாடங்களினால் மாணவர்கள் அடையும் பலனை உணர்வதில்லை அரசியலார். அரசியலாரின் பாடத்திட்டத்தின்படியும், கட்டளைப்படியும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் போதித்தால்,மாணவர்களின் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது.அந்தக்குற்றத்தைத்தான் இட்ட கட்டளையின் மூலம் அமைச்சர் அவினாசியார் தானே ஏற்றுக் கொண்டவராகிறார்.

அடுத்தபடியாக ஓர் ஆசிரியரின் கடமை, குற்றங்களை நீக்கி நீதியை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டியதாம். ஒழுங்கான ஆசிரியர் ஒருவருக்கு உண்டான இலக்கணம் இது என்பதை அமைச்சர் அவினாசியார் உணர்வார். ஆனால் மாணவர்களின் பாடம் ஒன்றில் புராணக்கதை வருகிறது. இராமன் வாலியை மறைந்து நின்று கொன்று, அவனுடைய நாட்டைச்சுக்ரீவனுக்குக்கொடுத்தான் என்று கதையில் காணப்படுகிறது. இவ்விடத்தில் ஆசிரியர் இராமன் ஒரு வீரனல்ல. பேடி என்று சொல்லவேண்டியது விதி. ஆனால் அரசியலாரின் சட்டப்படி அவர் தனது மானியத்தை இழக்க வேண்டியவராகிறார். அதனால் அவரதுவாழ்க்கைதுன்பக்கேணியாகிறது.அவரது.வாழ்வைக் கெடுத்த குற்றம் அரசியலாரையே சாரும். அப்படிக்கின்றி அவ்வாசிரியர் இராமன் ஓர் சிறந்த வீரன், தெய்வத்தின் மறுபிறப்பு என்று போதனை செய்து விட்டால், அரசாங்கச் சட்டத்தால் அவன் தனது பகுத்தறிவை இழந்தவனாகிறான். ஆசிரியனின் இலக்கணத்தை மீறியவனாகிறான். இது மக்கள் சர்க்காரின் தன்மையாகுமா? மனித உரிமை (பிரஜா உரிமை)க்காகப் போராடிய தோழர்களின் அரசாட்சியில், ஓர் ஆசிரியரின் மனித உரிமை பறிக்கப்படலாமா? தேசீயத் தோழர்களே சிந்தியுங்கள்.

இன்னும் கூறலாம் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது பிற்போக்கானது. பிற நாடுகள் எள்ளி நகையாடக்கூடியது. இந்து மதத்தில் பகவத் கீதை மிகவும் முக்கியமாகப் போற்றப்படுகிறது. மக்களில் நால் வருணத்தை உண்டாக்கியது என் செயலே என்று கண்ணன் கூறியதாகப் பகவத் கீதையில் காணப்படுகிறது. இதைப் போதிக்கும்போது ஓர் ஆசிரியன் "இப்படிப்பட்ட கொள்கையுடைய மதம் அறிவியல் உலகிற்கு யாதொரு பயனும் அளிக்காது. மக்களுக்குள் சாதி பேதம் இருக்கக்கூடாது என்று புரட்சி செய்யும் இக்காலத்திற்கு இக்கொள்கை உதவாது. மக்களில் நால்வருணத்தை உண்டு பண்ணியது நானே என்று கண்ணன் கூறுவது கடவுளின் இலக்கணமல்ல. அப்படிக்கூறுபவன்கடவுளாகஇருக்க முடியாது. இது ஆரியரின் சூழ்ச்சி" என்று தான் கூறவேண்டியதிருக்கிறது. இப்படிக் கூறுவது மதத்தைக் குறைகூறுவதாகுமா? இது எவருக்கும் வெறுப்பை உண்டாக்கக் கூடிய செயலாகுமா? இது நாத்தீகப் பிரச்சாரமாகுமா? தேசீயத் தோழர்களே, ஆத்தீகத் தோழர்களே பதில் கூறுங்கள். அவ்வாறு கூறியதற்காக அந்த ஆசிரியனின் மானியம் குறைக்கப்படும் என்றால் இது நேர்மையான செய்கையாகுமா? அந்த ஆசிரியன் முறை தவறியவன் என்று கூறுவது பொருந்துமா?

மதம் முறையற்ற தென்பதற்குப் பலப்பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம். சூரியனை ராகு என்னும் பாம்பு விழுங்கும்போது சூரியகிரணம்உண்டாகிறது என்றுமதம் கூறுகிறது. இதை ஆசிரியர் அறிவியல் துறையில்(விஞ்ஞானம்)சூரியனைப் பூமிசுற்றிவரும்போது பூமியின் நிழல் சூரியன் மீது படுவதால் கிரணம் உண்டாகிறது என்று தக்க ஆதாரத்துடன்போதிக்கிறார்.இதனால் முன்னையது அறிவிற்குப் பொருந்தாது என்பது மாணவர்களுக்குப் புரியும். சில வகுப்பார் பூணூல் அணிவது அவசியம் என்று மதக்கோட்பாடு உள்ளது. ஆனால் ஆசிரியர் பூணூல் அணிவது தற்காலச் சாதியொழிப்பு வேலைக்கு முட்டுக்கட்டைபோடுவதாகும் என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகிறார். இராவணன் என்ற அரக்கனை இராமன் கொன்றார் என்பதை விளக்க இராமாயணம் ஏற்பட்டது என்று பாடங்களில் வருகிறது. ஆனால் ஆராய்ச்சியுடைய ஓர் ஆசிரியர் இராமன் என்ற ஆரிய மன்னனுக்கும் இராவணன் என்னும் தமிழ் மன்னனுக்கும் நடந்த ஆரிய—திராவிடப் போராட்டமே இராமாயணக் காதை என்று கூறுவார்.

திரௌபதை அய்வருக்கும் தேவி அழியாத பத்தினி என்று பாரதம் கூறுகிறது. ஆனால் ஆசிரியர் திரௌபதை ஓர் பத்தினி (கண்ணகியைப் போல்) அல்ல என்று கூற வேண்டியிருக்கிறது. கண்ணன் துவாரகையில் 60000 கோபியர்களுடன் லீலைகள் புரிந்தார் என்று புராணக்கதையில் கூறப்படுகிறது. ஆனால் ஆசிரியர் "கடவுள்கள் செய்தால் லீலைகள், மனிதர்கள் செய்தால் பஞ்சமாபாதகம் என்பது ஆளுக்கொரு நீதி கற்பிக்கும் கதை" என்று பிள்ளைகளுக்குக் கூற வேண்டியிருக்கிறது இந்தக் காலத்தில்.

இந்து மதம் என்பது மனுநீதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது என்பது பல ஆராய்ச்சியாளர்களின் முடிவு. மனுநீதி, சமூகத்தில் இனத்திற்கொரு நீதி வழங்கும் முறையில் அமைந்திருக்கிறது. இதனால் சாதிப் பூசல்களுக்கு இந்து மதம் இடம் தருகிறது. ஆகவே ஓர் ஆசிரியர் இந்து மதம் சம்பந்தமான கதைகளை மாணவர்களுக்குப் போதிக்கும்போது அதிலுள்ள அநீதியை எடுத்துக் கூறினால்தான் சாதிப் பூசல்களுக்கும், மாணவர்களின் அறிவுத்தடைக்கும் இடம் இருக்காது. ஆனால் அந்த ஆசிரியர் கதையின்படியே கருத்தைச் சொல்லுவாரானால் வருங்காலச்சிற்பிகளான மாணவர்களின் அறிவுக்குத் தடைபோடப்படுகிறது. இதனால்சுதந்தர இந்தியாவின் எதிர்கால மக்களான மாணவர்களினால் நாட்டுக்குத் துளியளவும் நன்மை ஏற்படாது. எதிர்கால நலனுக்காக ஆசிரியர் நீதியைக்கற்பிப்பாரானால் அவரது மானியம் பறிக்கப்படுகிறது. இதனால் அந்த ஏழை ஆசிரியரின் வாழ்க்கை என்னாவது?

தமிழ் நாடெங்கும் தாய் மொழியிற் கல்வி போதனை செய்யப்படவேண்டும். ஆரம்பக் கல்வி செழிக்க வேண்டும். முதியோர் கல்வி பெருக வேண்டும் என்று துடி துடிக்கும் அமைச்சர் அவினாசியார் இச்சட்டத்தை உருவாக்கியதின் மூலம், தனது முயற்சிக்கு ஊக்கமளிக்கத் தேவையான ஆசிரியர்களை உற்பத்தி செய்ய முடியாது என்பதை உணர்வாரா? உணர்வாராயின் ஆசிரியர்களுக்குப் பூரண உரிமை கொடுக்க முன்வருவார் என எதிர்பார்க்கிறோம்.

## இலக்கியம்

இதுவரை திருநெல்வேலியில் அச்சாகி வந்த "இலக்கியம்" இப்பொழுது விருதுநகரிலேயே அச்சாவதற்கு ஏற்பாடு நடைபெறுகிறது. பங்குனி மலர் சிறிது காலந்தாழ்த்து வெளிவருமென்று செயலாளர் அறிவிக்கின்றார்.

**கவலைப்படாதே! கருப்புடையே அணி!**

(2ம் பத்தித் தொடர்ச்சி)

இவர்கள் காலில் கடவுளைக் கும்பிட்டு காணிக்கைக் கொடுத்துக் கடாட்சம் பெற்று எல்லாச் சம்பத்தும், வந்துவிடு மென்றும், பாவமெல்லாம் தீர்ந்துவிடு மென்றும் இனிபோய்ச் சேருவதும் பரலோகம்தானென்று நினைத்து நடந்தும் வருகிறார்களே? அவர்கள் எல்லோரையும்விடவா நீங்கள் உயர்ந்தவர்கள்? நம்மந்திரிகள் கூடத்தரும சாஸ்திரத்தைப் பின்பற்றித்தானே நடக்கிறார்கள். இதுவரையும் ஆங்கிலேய மிலேச்சர்கள் நம்மை ஆண்டார்கள். அவர்களுக்கு ஜீவஈஸ்வர அய்க்கியங்கள், தத்துவம், பாரமாத்தீகம் தெரியாது. நமது முன்னோர்களின் இந்து கலாச்சாரமும், இந்து தருமங்களும் எவ்வளவோ விசேடப்பட்டது. அதை உலகமெல்லாம் பரப்புவதற்கு மகாத்மாகாந்தி பாடுபட்டார். அவரைப் பின்பற்ற வேண்டாமா நாம்? மறையோர் குறைமுடிப்பான் பூண்டேன் விரதம் என்று ராமரும் சொல்லி இருக்கிறாரே? மறையோருக்குக் குறை ஏற்படுகையில், அதை நீக்குவது இராஜாங்கத்தின் தருமமல்லவா? என்கிற விஷயங்களெல்லாம் பெரிய இடத்தில் உபதேசங்களும் பேச்சுமாக முடிந்திருக்கும்.

கால்புண்ணிற்கு மருந்து சொன்னவன் தலையைக் கொட்டித் தட்டி வைத்துகட்டுஎன்று சொல்லாததினால் பொடுகுக்காரனின் தலை மிஞ்சிற்று. அதுபோலக் கருப்புச் சட்டைக்காரர்களை யெல்லாம் கழுவில் போடு! என்று ஆலோசனை சொல்லாததினால் கருப்புச் சட்டைக்காரர்கள் மிஞ்சினார்கள். அப்படி நடக்குமா? நடக்காது. விரோதியை நிந்திக்கும் வார்த்தைஎன்றெல்லாம் நினைக்கலாம். இந்துதரும சாஸ்திரப்படி சுயராஜ்ஜியத்தை நடத்த வேண்டுமென்கிற எண்ணமும் ஏற்பாடுமிருக்கிறதால், "ஏக ஜாதிர்த்விஜாதீம்ஸ்து வாஸரதாருண்யாக்ஷியன் ஜிஹ்வாயா: ப்ராப்து யாரச் சேதசம் ஜகன் யப்ரபவோ ஹிவ:"

பிராமணனைச் சூத்திரன் திட்டினால் நாக்கை அறுக்கவேண்டும். ஏனெனில் அவன் பிர்மாவின் தாழ்ந்த அங்கத்தினின்று பிறந்தவன். "சதம் பிராஹ்மணமாக்ருச்ய க்ஷத்தியோ தண்டமர்ஹதி: வைச்ய: ஸார்த்த சதம் சைவ சூத்ரஸ்துவதமர்ஹதி" பிராமணனது மனம் நோகும்படி க்ஷத்திரியன் ஏதேனும் சொன்னால் நூறு பொன்னும், வைசியன் அங்ஙனம் செய்தால் நூற்றைம்பது பொன்னும் அபராதம் விதிக்கவேண்டும். பிராமணனைத் திட்டுகிறசூத்திரனைக்கொன்றுவிடவேண்டும். இது இந்து தமது சாஸ்திரச் சட்டம். இதைத் தான் இந்துக்கலாச்சார மென்று வர்ணிப்பது.

இப்பொழுது நாமிருப்பது இந்து ராஜ்ஜியம் இந்து இராஜ்ஜியத்தில் இந்து தருமச்சட்டத்தைப் போட்டிருந்தால் நாம் என் செய்வது? யாரை நோவது? எங்கே போவது? ஆங்கிலேயர்களோ ஒதுங்கி நிற்கிறார்கள். பாகிஸ்தானோ இந்து உள்நாட்டு விவகாரத்திற்கு வராது. இந்தியா கவர்மெண்டோ இந்துக்கலாச்சாரங்களைத் துணையாகக் கொண்டது. வேதக்கடலென்று அனுமாரை இராமர் சொல்லியிருக்கிறார். இராஜகோபாலாச்சாரியே அந்த அனுமார் என்கிறார் நமது முதலமைச்சர். மனிதர்களை விட்டுத் தெய்வங்களிடம் முறை இடலாமென்றாலோ, தெய்வங்களெல்லாம் பார்ப்பார்கள் தெய்வம். பூணூலில்லாத தெய்வங்களில்லை. நீதி, நேர்மை, ஒழுக்கமுடைய தெய்வங்களென்று சொல்லுவதற்கு அவைகளின் சரித்திரத்திலுமிடமில்லை. அதுவுமல்லாமல் நம் தெய்வங்களுக்கு நமது திராவிட பாஷைகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள பாஷைகளும் தெரியாது. பிராமணர் மூலமாகத் தான் நமது தேவைகளுக்குப் பிராமணப் பாஷையில் விண்ணப்பம் போடவேண்டும். அதற்கு ஓமம், பூசை, அபிஷேகம், நவக்கிரக சாந்திசெய்து பார்ப்பார்களுக்குச்சோறு போட்டுத் தெட்சணையும் கொடுத்து ஆச்சாரிப் புரோகிதன் காலிலும் விழ வேண்டும். இத்தனை தொந்தரவுகளும் வேண்டாம். சாட்சிக்காரர்களை எல்லாம் கெஞ்சுவதைவிடச் சண்டைக்காரர்களைக் கெஞ்சிவிடலாமென்றாலோ, என்னைப் பொறுத்த வரையிலும் கவர்மெண்டினிடம் நம்பிக்கையில்லை. ஏனெனில் கல்வி எல்லாவற்றிற்கும் மேல். அந்த நம்கல்வி மந்திரியோ இராமாயணம் நமக்கு முன்னோர் கொடுத்த பொக்கிஷமென்கிறார். இராமாயணத்திலிருந்து நமக்குப் புது சுயராஜ்ஜியத்தை உண்டாக்கப் போவதாகச்சொல்லுகிறார். பண்டைய மதசம்பிரதாயங்களுக்கு விரோதம் பேசுகிறவர்களைத் தெண்டிக்கவும் உத்தரவு போடுகிறார். சந்யாசி வேஷம் போட்டு ஊராரிடம் பணம் பெற்று மடம் கட்டிச் சொத்துச் சேர்த்து சாமியார் சொத்தா? பொதுச் சொத்தா? என்று விவகாரம் வந்ததும் நான் சம்பாதித்தேன் என்று கோர்ட்டில் சொல்லித் தீர்ப்பு பெற்றுச் சொத்தையும் மடத்தையும் தன் தம்பிக்கு எழுதி வைத்து ரிஷியென்கிற பெயரோடு திருவண்ணாமலையிலிருக்கும் ரமண ரிஷியான மோசடி ரிஷியின் சேவைக்கும், ஆசீர்வாதத்திற்கும் பிரியம் கொண்டவராகவிருக்கிறார் நமது முதல் மந்திரி. எந்த நாட்டு மந்திரிகளும் ரிஷிகள் ஆசீர்வாதத்திற்குப் போக மாட்டார்கள். அதிலும் பிரத்தியட்சமாய் ரிஷிதன்மைக்கே பொருந்தாதபடி நடந்தவர்களை எட்டியும் பார்க்க மாட்டார்கள். நாணயம், பொதுத்தன்மை, தன்லாபம் முதலியவைகளைப் பிரதானமாகக் கொண்ட ரிஷிகளும், அவர்கள் இந்துக் கலாச்சாரமும், இந்து தருமமும் உடைய நமது நாட்டில், ரிஷிசேவையில்லாமலிருக்க முடிவதுமில்லை. நமது உள்நாட்டு மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் படித்தவர்; பாரிஸ்டர், விவகாரம் தெரிந்தவர். பிர்மசமாஜத்தைச் சேர்ந்தவர் என்றாலும், நம் சாஸ்திர நம்பிக்கையோ, பக்கத்துப் பேச்சின் மகிழ்ச்சியோ, செத்தவர்களைப் பிழைப்பிக்கலாமென்கிற நம்பிக்கையுடன் ஒருவனை டில்லிக்கு அழைத்துச் சென்றார். செத்தவர்களைப் பிழைப்பித்ததாக நம்மை ஏமாற்றி வரும் பழைய எட்டுக் கதைகளிலிருக்கிறதேயல்லாமல், இப்பொழுது இந்த உலகத்தில் கண்டவர்களும் கேட்டவர்களுமில்லை. இதை நம்பினவரோ போலீஸ் எஜமான். கருப்புச் சட்டைக்காரர்கள் கருப்பு மேகத்தோடு மேகமாகவந்து,' பிராமணர்களையும் கவர்மெண்டையும் அப்படியே விழுங்கிவிட்டால் என்ன செய்வது? அம் மாதிரிக் கதைகளும் நமது சாஸ்திரங்களிலிருக்கிறது. செத்தவர்களைப் பிழைப்பிக்கலாம் என்கிற நம்பிக்கையுடைய போலீஸ் மந்திரியை என்னால் நம்ப முடியவில்லை, இந்த மந்திரிகள் தானே கவர்மெண்டு.

இந்து தரும நம் சுயராஜ்ஜியக் கவர்மெண்டுக்குக் கருஞ்சட்டைக் காரர்களை யெல்லாம்கொன்றுவிடப் பெரிய ஆதாரமொன்றிருக்கிறது. அதையும் சொல்லி விடுகிறேன். இராமாயணப் பிரசங்கத்தை காங்கரஸ் ஆள்வைத்துச் செய்து கவர்மெண்டும் பிரசாரர்களை ஏற்படுத்தியிருந்தார்கள். இப்பொழுது சென்னைக் கவர்மெண்டே அனுமார் என்கிறது. இராம இராஜ்ஜியப் பேச்சும் வந்துகொண்டிருக்கிறது. இராஜாங்கப் பேப்பர்களோ இராமாயண பாரதத்திற்கு உரையுமெழுதுகின்றன. அந்த இராமாயணத்திலுள்ள அந்தப்பாகம் இவர்களுக்கு ஞாபகம் வரவில்லையோ, பக்கத்து மேளக்காரர்கள் தட்டவில்லையோ. ஓமந்தூரார் நல்லவர் சாது என்கிறார்களே அதனாலோ? எதனாலோ? அந்த உத்தரவு போடவில்லை. இராமாயணமும் இராம இராஜ்ஜியமும் பிரமாணங்களானால் அந்த உத்தரவு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த இராமாயண இராம நீதியைச் சொல்லுகிறேன். சேதுகட்ட வருணனை இராமர் வேண்டினார். வருணன் உடனே வரவில்லை. கோபித்து நாணேற்றினார். வருணன் வந்தான். இராமருக்கு அணைக்கு வேண்டிய தெல்லாம் செய்தான். வருணா! நீ உடனே வராததினால் கோபித்து நாண் பூட்டி விட்டேன், அதற்கு இலக்கு வேண்டும் எங்கே

பாணத்தை விடட்டும்! சொல்! என்று இராமர் கேட்டார். வடக்கே ஒரு தீவில் என் விரோதிகளிருக்கிறார்கள். அவர்கள் பேரில் விட்டு அவர்களையெல்லாம் கொல்! என்றான். அவர்கள் உனக்கு என்ன தீங்கு செய்தார்கள் என்று இராமர் கேட்டார். என் தண்ணீரைத் தொட்டுக் குடித்தார்கள் என்றான் வருணன். பாணத்தை விட்டார் இராமர். எல்லோரையும் கொன்றார். வருணன் தேவனானதால் பிராமணனென்று கதைகள் சொல்லும். பிராமணர்கள் தண்ணீரை யாரும் தொடக்கூடாது. ஆறு, குளம், கிணறு எல்லாம் அவர்களுக்குத் தனி. அதைத் தொட்டவர்களை இராமரே கொன்று இந்து தருமத்தை நிலைநாட்டியிருக்கையில் மற்ற அரசர்களும் அதை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத் தான்.

திராவிட வாலிபர்களே! இதற்கெல்லாம் பயமோ, கவலையோ படாதீர்கள்! உங்கள் நியாயம், சத்தியம், காலைச் சூரியன் உதயமாகி விட்டது. பொறுமையோடிருங்கள்! அவர்கள் ஏளனத்தைக் கவனிக்காதீர்கள்! சொட்டு விழுந்தால் பழம்என்றுகோலி ஆடும் பிள்ளைகள் சொல்லுவதுபோல, உங்கள் பேரில் குற்றம் கண்டு பிடிக்கவேயிருப்பார்கள்! நமது பெரியார் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லுவார்! உலகத்திற்குக் கண்குருடில்லை! இந்த அனியாய உத்தரவுகளை எல்லோரும் தெரிந்துகொள்ளுவார்கள்! பார்ப்பான் காலில் தெய்வத்தை நம் கூட்டம் கண்டுகொண்டிருக்கும் வரையிலும் இப்படித்தானிருக்கும். உலகமே மாறிக்கொண்டு வருகையில் இதுவும் மாறியே தீரவேண்டும்! உண்மைக்குப் பரிந்து பேசும் உத்தமர்கள் வருவார்கள், யோசனையும் பெருந்தகையுமுடையவர்களும் உண்டாவார்கள். உங்களுடைய தார்மீக லட்சியங்கள், உளியும் சம்மட்டியும் வைத்துக்கொண்டு வேலை செய்யவில்லை. சிற்பிகளிடம் கேட்காமல் மரம் வளர்வது போல மண்ணுக்குள் வேர்களையும், வானத்தில் கிளைகளையும், இயற்கையிலேயேவிடுகின்றன. இராஜசிம்மாதனமும், குரு பீடங்களும் சேர்ந்துதானிருக்கு. இவைகள் நெருப்பும் காற்றும் சேர்ந்ததுபோல். இரண்டும் பெரும் மழையில் தணிந்து போகும். அப்பொழுது குளிர்ச்சியாகவிருக்கும். எல்லாம் தழைக்கும். இராஜசிம்மாதனங்களும், குருபீடங்களும் எல்லாத் தேசங்களிலும் சிதறிப்போயின! நம்சுயராஜ்ஜியம் புதிதானதால் அதுவும் சிறிது நாளில் போய் விடும்! ஒரு சாதிக்கு இன்னொரு சாதி தாசி மகனென்றும், வைப்பாட்டி பிள்ளை என்றும் ஏட்டில் எழுதிவைத்துக் கொண்டு, அதுகடவுளெழுதினது என்று சொல்லுவது நியாயமில்லை! அதன் ஆதாரப்படி சட்டமும் நியாயமும் கூடாது என்றுதானே நாம் சொல்லுகிறோம். சொல்லுவது குற்றமா? எழுதி வைத்துக் கொண்டு இழிவுபடுத்துவது குற்றமா? இதை உணராமல் சனங்களும் இராஜாங்கமும் எத்தனை நாளைக்கு இருக்கும்? கிழவன் எழுதுகிறதில் குற்றமிருக்கலாம். இருந்தால் சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# ஒரு குதிரைக்கு ஒரு அரசாங்கம்!

[சோமு]

என்ன? ஒரு குதிரை கொடுத்தால் ஒரு அரசாங்கம் தருகிறாயா? ஏதாவது மூளைக்கோளாறா? என்று என்னைக் கேட்பீர்கள். ஆனால் கேட்பது நானல்ல. ஒரு அரசன் கேட்கிறான், ஒரு அரசாட்சியே தருகிறேன், அதற்குப் பதிலாக ஒரே குதிரை கொடுங்கள் என்று. யார் அந்த அரசன்? எந்நாட்டு மன்னன் அவன்? இப்படியும் ஒரு முட்டாள் அரசன் இருக்கிறானா? எனக்கேட்பீர்கள். ஆமாம்! இப்படிப் பட்ட ஒரு அரசன் இருந்தான். இங்கல்ல! இங்கிலாந்திலே!

அய்ரோப்பாவையே தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற ஆதிக்க வெறியினால், பிறநாடுகளின் பலம் எவ்வளவு, அந்நாட்டினுடன் போர்புரிந்து வெற்றி கொள்ளுமளவு தனக்குச்சக்திஉண்டா?படைஉண்டா? இதற்கு மக்களின் ஆதரவு உண்டா? என்பதைப் பற்றி யோசிக்காமல், மற்ற நாடுகளுடன் சண்டை செய்து வந்தான் ஜான் என்ற மன்னன். மக்களுக்குப் பல கொடுமைகள் செய்து வந்தான். தன் அண்டை நாடுகளுடன் அடிக்கடி காரணமின்றிப்போர் புரிந்து வந்தான்.

பல இடங்களில் தோல்வி அடைந்தான். ஆயினும் அவன் ஆதிக்கவெறி அவனை விடவில்லை. மேலும் மேலும் போர்தொடுத்தான்! அதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடின. ஒரு அரசனின் ஆதிக்கவெறிக்கு அநியாயமாக மக்கள் பலியாவதா? என மக்கள் நினைக்கலாயினர். பல அரசாங்க நிபுணர்கள் அரசனிடம் மக்கள் அடைந்திருக்கும் மனக்கசப்பையும் அந்த மனக்கசப்பை வளர விடுவது, அரசனுக்குத் தீமையாக முடியும் என்பதையும்விளக்கிக்கூறினார்கள்.ஆனால் அரசன் (அந்தக் காலத்தில் இருந்த ஒரு நியதிப்படி) 'ஆண்டவனின் பிரதிநிதி' அரசன்! (Divine Right of king) எனவே அரசன் ஆணைப்படி குடிகள் நடந்தாக வேண்டுமென்று கூறிவிட்டான்! போரை நிறுத்த மறுத்து விட்டான்! அரசனுக்கு எதிராக 'மக்களின் சக்தி' திரண்டு விட்டது. 'அரசனை ஒழித்தாலன்றி, நமக்கு நல்ல காலம்' இல்லை என்று தீர்மானித்தார்கள். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வந்தார்கள். சண்டையிலே தோற்று, எதிரியிடம் பணிந்து, மன்னிப்புக்கேட்டுக் கொண்டு, ஜான் மன்னன், திரும்பி வரும்போது ஆணவக்காரனின் ஆதிக்க வெறியால் ஆத்திரமடைந்த மக்கள், அவனை எதிர்த்தார்கள். அரசனுக்கும், அவன் நாட்டு மக்களுக்கும் போர் நிகழ்ந்தது! போரிலே அரசனின் படைகள் முறியடிக்கப்பட்டனர், தனிமையிலே அரசன் போராடவேண்டிய நிலைமையிலே சிக்கிக்கொண்டான். அப்போது தான் "ஒரு குதிரை கொடுங்கள், இந்த ராஜ்ஜியத்தையே தருகிறேன்" எனக் கதறினான். ஆனால் தப்பிச்செல்லக் குதிரை கிடைக்கவில்லை. அவன் கொல்லப்பட்டான்! ஆதிக்க வெறி கொண்டதால் தன் நாட்டு மக்களாலேயே கொல்லப்பட்டான் ஜான் என்ற இங்கிலாந்து மன்னன். ஜான் மன்னன் போலவே இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி தன் நாட்டு மக்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டான். ஆதிக்க வெறியர்களின் முடிவு இப்படிப் பரிதாபகரமானதாகத் தான் முடியும் என்பதை நாம் கூற வேண்டியதில்லை, சரித்திரம் கூறும்.

## சிங்கார வேலனார் நாள்.

22—2—48 கோலாலம்பூர்

இந்நகர் "இந்தியன் நியூ டெமாக்கரட்டிக்யூத் லீக்" சார்பில் அறிஞர் மா. சிங்கார வேலனார் நாள் சிறப்பான முறையில் கொண்டாடப் பெற்றது.

தோழர் எஸ். ஆர். பெருமாள் தலைமையில் நிகழ்ந்த அக்கூட்டத்தில் தோழர் எஸ். ஆறுமுகம் படத்தைத் திறந்து வைக்கத் தோழர்களான ஆ. அங்கமுத்து, சி. வி. குப்புசாமி, அ. லெட்சுமணன், ஜீ. குமாரசாமி, கெ. எஸ். நாதன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். தோழர் கெ. எம். மணியம் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்.

சிங்கார வேலனார் பெயர் என்றென்றும் நின்று நிலவுமாறு ஞாபகச் சின்னங்கள், ஸ்தாபனங்கள் நிறுவுமாறும், அவரெழுதிய கட்டுரைகள் அனைத்தையும் தொகுக்குமாறும், தொழிலாளர்கள் ஆண்டுதோறும் அவர் நாளைக் கொண்டாடவேண்டுமென்றும், தொழிலியக்க, அறிவியக்கப் பிரமுகர்களைக் கேட்டுக் கொண்டு பல தீர்மானங்களும் நிறை வேற்றப் பட்டன என்று காரியதரிசி எழுதுகிறார்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE

# எடை தீர்ப்பு

### திருவள்ளுவரும் திராவிடக் கொள்கையும்

ஆசிரியர்: திருக்குறள் முனிசாமி.
விலை 2 அணா.
"பொன்னி" வெளியீடு,
புதுக்கோட்டை.

அழிவு தரும் மதம், ஆபாசமான கதை, புளுகு நிறைந்த புராணம் படிந்த உள்ளமாக இல்லாமல் ஒற்றுமை, சமத்துவம், பகுத்தறிவு படிந்த உள்ளமே வள்ளுவரை அறிந்து கொள்ளும். அவ்வாறு அறிந்தால் திராவிடர் கழகக் கொள்கைகளின் அடிப்படையும் திருவள்ளுவரின் அடிப்படையும் ஒன்றுதான் என்ற முடிவிற்கே வரவேண்டும் என்பதை ஆசிரியர் அய்ந்தாறு திருக்குறள்களைக் கொண்டு அழகிய முறையில் விளக்கியிருக்கிறார். அழகிய தமிழ் நடை. அவினாசியாரும் படித்துப் பயனடையலாம்.

### பெரியார் முழு உருவப்படம்.

விலை அணா 0-5-0.
"பொன்னி" அலுவலகம்,
த. பெ. 39. புதுக்கோட்டை.

"பொன்னி" பொங்கல் மலரில் தோழர்கள் கண்டு பாராட்டி இதனைத் தனியாக அச்சிட வேண்டுமென்ற வேண்டுகோளுக்கிணங்கி இன்று இது தனியே படமாக வெளிவந்திருக்கிறதென்றால் இதனைக் குறித்து எதுவும் சொல்லவேண்டுமோ? அழகிய ஆர்ட் அட்டையில், இருவண்ணம் குழைத்துத் தீட்டிய 8x6 அளவிலான இப்படம் எவர் கண்ணையும் கவரவல்லது.

### பேனா முனை.

(மாத வெளியீடு)
ஆசிரியர்: பேனாமுனை பக்ருத்தீன்
712. கேலாங் ரோட், சிங்கப்பூர்.

தமிழ் நாட்டிலுள்ள தற்கலை என்ற ஊரில் பிறந்த இவ்வாசிரியர் தற்கலைக்கு அரோகரா போட்டு விட்டு பேனாமுனையை புனர் ஜன்மம் செய்திருக்கின்றார். 1947 ஜனவரியோடு நின்று விட்ட இப்பேனாமுனை, மீண்டும் பழைய கொள்கைகளோடு உழைக்க முன்வந்திருக்கிறது. வரவேற்கிறோம்.

### தாய்நாட்டின் நலிவு.

(ஒரு கவிதை நூல்.)
ஆசிரியர் மாவண்ணா தேவராஜன்.
விலை 0-3-0.
வெளியிடுவோர்:
ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்,
திருவத்திபுரம், வ. ஆ.

நம் தாய் நாட்டில் மலிந்துள்ள நலிவு அழிவுற்றுப், பழையபடி தாய் நாட்டைச் செழுமை அழகு பெறச் செய்ய திராவிடராட்சியே மருந்து என்று, வேற்றொலி வெண்டுறைப்பாக்கள் 29க் கொண்டு நலிவுகளையும் நலிவு தீர்வகையையும் எளிய நடையில் ஆசிரியர் இயம்பியுள்ளார். இந்த நூலைப் படித்துச் சுவைக்க வேண்டுமானால், முதலில் இந்தப்பாவைப் படிக்குமுறையைத் தெரிந்து கொள்ளுதல் நலமாகும். காணப்படும் ஒரு சில அருஞ்சொற்களுக்கும் கீழேயே பொருளும் தரப்பட்டிருந்தால் எல்லோருக்கும் பயனுடையதாயிருக்கும். என்று மழியாத இலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்க நூல் என்றே கூறலாம்.

## சிறைச்சாலை என்ன செய்யும்?

இல்லாத ஒரு ஆதிசேஷனை இருப்பதாக நம்பி ஏமாந்து கிடக்கும் பரம்பரைப் பழக்கத்தை ஒட்டி, மாகாண சர்க்கார் இல்லாத ஒரு அமைப்பை இருப்பதாக நினைத்துக் கருஞ்சட்டை அமைப்பின் மீது தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அத்தகைய அமைப்பு முறைஇல்லை என்றும், கருஞ்சட்டை என்பது இழிவுக்கு, துக்கப்படும் ஒரு அறிகுறி அல்லது சின்னந்தான் என்றும், சின்னங்களை அணிந்து கொள்வதையே ஆட்சியாளர்கள் ஒரு படையாகக் கருதுவார்களானால் அவர்களுக்கு படையமைப்பு முறை தெரியாது என்பதைத்தான் அது குறிக்குமென்றும், பெரியாருடைய தெளிவான அறிக்கையின் பிறகும், நிர்வாகக் கமிட்டியின் இன்றையத் தெளிவான தீர்மானத்தின் பிறகும் கூட, ஆட்சியாளர்கள் கருஞ்சட்டை அணிந்து கொள்வதைக் கூடக் குற்றமாகக் கருதி நம்மீது அடக்கு முறையைப் பிரயோகிக்க நினைப்பார்களானால், தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படையாக காட்டிக் கொள்வதற்காக ஒரு சின்னத்தை அணிந்து கொள்ளக்கூட இன்றையச் சுதந்தர சர்க்காரில் உரிமையில்லை என்பதை உணர்ந்து கொண்டு, அதன் பயனாய் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அதிக பேதாபேதம் கண்டிராத, அதாவது தாழ்வையே பன்னெடுங் காலமாக அநுபவித்து வரும் திராவிட மக்களாகிய நாம் குடிசை வீட்டில் கூழுக்கும் கதியற்று வாழ்வதைக் காட்டிலும், மாடமாளிகை போல் காணப்படும் சிறைச்சாலையில் வேளாவேளை சோறுண்டு காலம் கழிப்பதையே மேல்என்று கருதிச் சிறைக்கூடம் புகத்தயங்கமாட்டோம்.

[சி. என். அண்ணாதுரை]

### மகாகவி பாரதியார்.

கவிஞர் அறிஞரின் கருத்தோவியங்கள்
விலை அணா 0-8-0.
ஞாயிறு நூற்பதிப்பகம்,
28 அம்பலத்தாடு, அய்யர் மடத்துவீதி
புதுச்சேரி.

சுப்பிரமணிய பாரதியாரைக் குறித்துப் புரட்சிக் கவிஞர் நெடுநாட்களுக்கு முன்பு பாடிய சில கவிதைகளும், அறிஞர் அண்ணாவின் திராவிடநாட்டுத் தலையங்கம் ஒன்றும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. சில நல்ல கவிதைகள் எவ்வெப்பொழுது பாரதியாரிடம் பிறந்தன என்பதைச் சந்தர்ப்பத்துடன் விளக்குகிறார் கவிதை மொழியிலே கவிஞர். படித்துப்பாருங்கள் என்று சொல்லவா வேண்டும்.

### சிந்தாமணி.

(மாதமிருமுறை)
ஆசிரியர்: வ. கோபால்.
விலை 0-2-0. ஆண்டுக்கு 3-0-0.
73 ஜாபர் சாகிப் தெரு, திருச்சி.

ஒரு சுரண்டலற்ற சோஷலிசப்புதிய சமுதாய அமைப்பு, புதிய தமிழகக் குடி அரசு, அய்க்கிய இந்தியா என்கிற லட்சியங்களுக்காக எத்தாக்குதலுக்கும் வளைந்து கொடுக்காமல் சேவை செய்ய முன்வந்திருக்கின்றது என்கிறார் இதன் ஆசிரியர். "புதிய தமிழகக் குடி அரசு" "அய்க்கிய இந்தியா" இவ்விரண்டையும் ஆசிரியர் புரிந்திருக்கவேண்டுமென்றே நினைக்கின்றோம். பொதுவாக ஜனநாயக உரிமைக்குப் பாடுபடும் போக்கு முதலிதழில் காணப்படுகிறது.

### பிரதமரே கூறுகிறார்!

வெளி நாடுகளிலிருந்து உணவு தருவிப்பதில் மாகாணம் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்ய அதிகாரமில்லை இந்திய சர்க்காருக்குத்தான் அதிகாரம்.

கட்டுப்பாடுகள் பாமர மக்களுக்கு நன்மை செய்யவே ஏற்படுத்தப் பட்டன. ஆனால் அதிகாரிகளும் வர்த்தகர்களும் மிராசுதாரர்களும் கள்ளமார்கெட்காரர்களும் சேர்ந்து சதி செய்து பாவத் தொழிலில் ஈடுபட்டு கட்டுப்பாடுகள் சரியாக வேலை செய்யாமல் குலைத்து விட்டனர்.

## சட்டைமட்டுமல்ல! கோவணமும் கருப்பாகட்டும்!